வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 13.10.2023 வெள்ளிக்கிழமை இதழ் : 307 பக்கங்கள் : 16




# நீதிபதி சரவணராஜாவுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை!

## குற்றப் புலனாய்வு பிரிவினர் அறிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 13

**அச்சுறுத்தல்கள் காரணமாக பதவி விலகி வெளிநாட்டில் தஞ்சம் புகுந்தார் என்று கூறப்படும் முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு எந்தவித உயிர் அச்சுறுத்தல்களும் இருக்கவில்லை. முன்னேற்பாடாக திட்டமிட்டே அவர் வெளி நாடு சென்றுள்ளார் என்று குற்றப் புலனாய்வு பிரிவின் டிஜிற்றல் பிரிவு அரசாங் கத்துக்கு அறிக்கையிட்டுள்ளது.**

முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதி ரி. சரவ ணராஜா கடந்த மாதம் 25 ஆம் திகதி இந்தியா செல்வதற்காகவே விடு முறை கோரினார். இதற்கு அனுமதி வழங்கப்பட் டது.

நீதிபதியின் முன்னேற் பாடான திட்டத்துக்கு இணங்க கடந்த செப் ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி அவர் வெளிநாட் டுக்கு சென்றுள்ளார். இந் தச் செயல் தொடர்பில் விசாரணைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன.

தனக்கு உயிர் அச்சுறுத்தல்கள் இருக்கின்றன 11



# வடக்கின் நிலைமை மகிழ்ச்சியளிக்கிறது!

## யாழ். வந்த பிரிட்டன் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஒக். 13

வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாக பிரித்தானிய அமைச்சர் ஆன் மேரி பெலிண்டா ரவேலியன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்த பிரிட்டன் அமைச்சர் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸை சந்தித்து பேசினார். 11

# நாட்டில் எவ்வாறான யுத்தம் நடந்தது உண்மையை கூறும் அறிக்கை தயாராம்!



## சரத் வீரசேகர சொல்கிறார்

கொழும்பு, ஒக். 12

ஜெனிவாவில் நடைபெறும் ஒவ்வொரு மனித உரிமைகள் மாநாட்டிலும் இலங்கை இராணு வம் போர் குற்றம் இழைத்ததா கக் குற்றம்சாட்டப்படுகிறது. இத னால், அதற்குப் பதில் அளிக்க வும், யுத்தத்தின் உண்மை நிலையை எடுத்துக் காட்டும் நோக்கிலும் விசேட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குறிப்பிட்டார்.

இந்த விசேட அறிக்கை, நாட்டில் எவ்வாறான யுத்தம் நடைபெற்றது 11

# காய்ச்சலால் இளம் பெண் உயிரிழப்பு

வடமராட்சி, ஒக். 13

காய்ச்சலால் பீடிக் கப்பட்ட இளம் குடும் பப் பெண் சிகிச்சை பல னின்றி உயிரிழந்தார்.

வல்வெட்டித்துறை - வாடி ஒழுங்கையைச் சேர்ந்த சி.கேனுசா (வயது24) என்ற 11

# நாட்டின் தலைவராவதற்கு நாமலுக்கு தகுதி உண்டு!

## மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஒக். 13

மக்களின் ஆதரவும் கட்சியின் ஆதரவும் நாமல் ராஜ பக்ஷவுக்கு இருப்பதால் அவர் நாட்டின் தலைவராக வருவதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள் ளார்.

ருமேனியாவில் உள்ள சிறீ லங்கா பொதுஜன பெர முனவின் கிளையின் சில அதிகாரிகளுக்கும் 11

# தேர்தலுக்காகவும் போராடும் நிலைமை உருவாகியுள்ளது!

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13

உள்ளூராட்சிமன்ற தேர்தலை பிற்போட்ட ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்களை பிற்போடுவது கடினமானதல்ல. ஆகவே, எதிர்வரும் ஆண்டு ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறுவது சந்தேகத்துக்குரியதே. தேர்தலுக்காகவும் போராட்டத்தில் ஈடுபடவேண் டிய நிலை தோற்றம் பெற்றுள்ளது என்று தேசிய 11

# விக்னேஸ்வரன் வெகுவிரைவில் மருத்துவரை சந்திக்க வேண்டும்!

## சுமந்திரன் எம். பி.

யாழ்ப்பாணம், ஒக். 13

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி. வி. விக் னேஸ்வரன் வெகுவிரைவில் மருத்துவர் ஒருவரை சந் திக்க வேண்டும் என்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட் டத் தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள் ளார். 11

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள்

# சி. சி. ரீ. வி. கமெரா பதிவுகளை பார்வையிட்டனர் நீதியரசர்கள்

கொழும்பு, ஒக். 13

ஈஸ்டர் ஞாயிறன்று, கொழும்பு ஷங்ரிலா ஹோட் டல், கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களை குறிவைத்து மத தீவிரவாதிகள் நடத் திய தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பான சி. சி. ரீ. வி. கமெரா பதிவுகள், வழக்கை விசாரிக்கும் மூன்று பேர் கொண்ட மேல் நீதிமன்ற அமர்வு முன் காட்சிப்படுத்தப்பட்டது.

நீதிமன்ற அறையில் அமைக்கப்பட்டிருந்த 11

# ஐ. எம். எவ்விடமிருந்து கடன் இலங்கை விரைவில் ஒப்பந்தம்!

நியூயோர்க், ஒக். 13

கடன் மறுசீரமைப்பு தொடர்பாக கடனாளி களுடன் பேச்சுகளை உறு திப்படுத்த முயற்சித்தா லும் சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து அதிக நிதியைப் பெறுவதற்கு உதவும் ஒப்பந்தத்தை அடுத்து வரும் நாட்களில் இலங்கை செய்யும்.

தெற்காசிய நாடு மற் றும் ஐ. எம். எவ். அதிகா ரிகள் இந்த வாரம் மொராக்கோவில் நடத் திய பேச்சை தொடர்ந்து ஊழியர்கள் அளவிலான உடன்பாட்டை எட்டுவ தில் இலங்கை நெருக்க மாக உள்ளது.

நாட்டின் 300 கோடி டொலர்கள் பிணை எடுப் பின் கீழ் அமைக்கப்பட் டுள்ள பொருளாதார இலக்குகள் மற்றும் சீர்தி ருத்த இலக்குகளை அடை வதற்கான இலங்கையின் முன்னேற்றத்தை ஐ. எம். எவ். மதிப்பிடுகிறது. 11

# இந்து சமுத்திரத்தின் மிகப்பெரும் விநியோக ஸ்தானமாக கொழும்பு!

## இந்து சமுத்திர ஒன்றிய மாநட்டில் ஜனாதிபதி



கொழும்பு, ஒக். 13

இந்து சமுத்திரத்தில் இலங்கை மூலோபாய அமைவிடத்தை கொண்டுள்ளது. கொழும்பு துறை முகத்தை அபிவிருத்தி செய்தால் வலயத்தின் மிகப் பெரிய விநியோக மத்தியஸ்தானமாக உருவெடுக் கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரி வித்துள்ளார்.

"காலி உரையாடல்" என்ற தலைப்பில் 11

## இப்படியும் நடக்கிறது

மன்னன் ஒருவன் வேட்டையாடப் போவதற்கு முன் தனது அமைச்சரை அழைத்து, 'மழை வருமா?' எனக் கேட்டான்.

'வராது' என்றார் அமைச்சர்.

வழியிலே ஒரு கழுதை மேல் வந்து கொண்டிருந்த குடியானவன் ஒருவன், 'கொஞ்ச நேரத்தில் மழை வரும்' என எச்சரித்தான்.

அதைப் பொருட்படுத்தாமல் போன மன்னன், வேட்டை ஆடிக் கொண்டிருந்தபோது கடும் மழை வந்து நன்றாக நனைந்து போனான்.

திரும்பும் வழியில் குடியானவனை சந்தித்து, 'மழை வரும் என்று உனக்கு எப்படி தெரியும்?' எனக் கேட்டான்.

அவனோ, 'மன்னா, எனக்குத் தெரியாது. ஆனால், என் கழுதைக்கு தெரியும். மழை வரும் முன் அது தன் காதுகளை முன்னுக்கு நீட்டிக் கொள்ளும்.' என்றான்.

உடனே மன்னன் அமைச்சரை பதவியிலிருந்து நீக்கிவிட்டு கழுதையை அமைச்சராக்கினான்.

இந்தக் கதைக்கும் இனி எழுதப்போகின்ற விடயத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அதன்பின்னரும் இரண்டுக்கும் தொடர்பு இருக்கின்றது என்று நீங்கள் கருதினால் அதற்கு நான் பாத்திரவாளி அல்ல.

அது ஒரு முக்கியமான பதவிக்கு ஆட்களை சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சை. மிகவும் கண்ணியத்துடனும் பொறுப்புடனும் பணியாற்றுகின்ற முக்கிய பதவி அது. அந்தத் துறையில் ஏற்கனவே, பணியாற்றுகின்றவர்களிடையே போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு அவர்களில் சிலருக்கு அந்த முக்கிய பதவிக்கு நியமனம் வழங்கப்படுவது உண்டு.

அண்மையில், நடைபெற்ற அந்தப் போட்டிப் பரீட்சையில் தோற்றிய தமிழர்களில் ஒரு பெண்மணி அதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருக்கிறார். அந்தத் தகவல் வெளிவந்த நாளிலிருந்து சமூக வலைத்தளங்களில் அவருக்கு பாராட்டுக்கள் குவிந்து கொண்டிருக்கின்றன. அவரை நன்கு அறிந்தவர்கள், அவரோடுகூட பணியாற்றியவர்கள், நண்பர்கள் என்று எல்லோரும் அவரைப் பாராட்டிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், அவர் பற்றிய தகவல் ஒன்றைத் தெரிந்த நண்பர் ஒருவர் சொன்னார், 'இவர் பற்றி ஏற்கனவே அவரது துறைசார்ந்த பெரியவர்கள் அவரிடமே முறையிட்டிருக்கின்றனர். தனது வாடிக்கையாளர்களிடம் பணத்தைப்பெற்று கொடுக்க வேண்டிய இடங்களில் கொடுத்து, விசயங்களை இவர் சாதித்து வருவதை அறிந்த, அவரது துறைசார்ந்த பெரியவர்கள் அவரை முன்னர் ஒருதடவை எச்சரித்தனர் என்றும் அப்படியான ஒருவர் அந்த முக்கிய பதவிக்கு வந்தால் என்ன செய்வார் என்பதை தெரிந்து கொள்ளாமலே சிலர் பாராட்டுகின்றார்கள் எனவும் அதுதான் பரவாயில்லை, ஆனால் அவரை தெரிந்தவர்களுமல்லவா பாராட்டுகின்றார்கள் அதுதான் ஒன்றும் புரியவில்லை' என்று.

ஏற்கனவே நமது மண்ணில் பொறுப்பாக பணியாற்றிக் கூடியவர்களை தேடிக்கண்டுபிடிக்க வேண்டியிருக்கின்றது.

தமது வேலைகளைப் பொறுப்புணர்வுடன் சிரத்தையுடனும் செய்யக்கூடியவர்கள் அருகி வருகின்றனர். இது ஒரு சில துறைகள் என்றில்லாமல் அனைத்து துறைகளிலும் பெரும் நோயாக மாறிக் கொண்டிருக்கின்றது.

பன்னிரண்டு வயதுக் குழந்தை யாரோ சிலரின் அசிரத்தையால் கைகளை இழந்துபோய் நிற்கின்றது. அங்கே யார் தவறு செய்தார்கள் என்பதல்ல நாம் சொல்ல வருவது, இதுபோன்ற அக்கறையீனம் இன்று சர்வ சாதாரண விடயமாகியிருக்கின்றது. அப்படியான நிலைமையில் முக்கிய பதவிக்கு வருகின்றவர்கள் தமது பொறுப்பை உணர்ந்து பணியாற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

வேலியே பயிரை மேயக்கூடாது என்பார்கள். ஆனால், நாம் பசுவைக் கொண்டுவந்து நெற்காணியினுள் விட்டுவிட்டு - அதாவது அது மேயும் என்று தெரிந்துகொண்டு, கொண்டுவந்து விட்டுவிட்டு, பின்னர் பசு நெல்லை மேய்கின்றது என்று புலம்புவதில் எந்தப்பயனும் ஏற்படப்போவதில்லை. நெற்காணிக்குள் பசுவைக் கட்டுவதை தடுப்பது ஒன்றே பயனுள்ள விடயமாகும்.!

**-ஊர்க்குருவி.**

# ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல் 9 ஈரானியர்களுக்கு மரண தண்டனை!

கொழும்பு, ஒக். 13

ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டு தொடர்பாக கைது செய்யப்பட்ட ஒன்பது ஈரானிய பிரஜைகளுக்கு தீவிர விசாரணையில் குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில், கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை குறித்த 9 ஈரானிய பிரஜைகளுக்கும் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

இந்த ஈரானிய பிரஜைகள் கடந்த 2019 பெப்ரவரி 24ஆம் திகதி அக்குறணை கடற்பரப்பு பகுதியில் வைத்து இலங்கை கடற்படையால் 100 கிலோ ஹெரோயினுடன் சந்தேகத்தின் பேரில் ஒன்பது பேரும் கைது செய்யப்பட்டனர்.

பின்னர், இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்

மீட்கப்பட்ட ஹெரோயின் போதைப்பொருள் சோதனைக்காக அரச பகுப்பாய்வாளரிடம் அனுப்பி வைக்கப்பட்டு சுமார் 84 கிராம் பொதிகளில் ஹெரோயின் போதைப்பொருள் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து, குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில், நீதிபதி ரணராஜாவால் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரியவகை ஆழ்கடல் மீன் புத்தளம் மீனவரிடம் சிக்கியது!

புத்தளம், ஒக். 13

புத்தளம் மாவட்டத்தில் நயினா மடு பகுதியில் மீனவர்களின் வலை யில் அரியவகை ஆழ்கடல் மீன் இனம் ஒன்று பிடிபட்டுள்ளது.

ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்ற நயினாமடு பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் வலையில் குறித்த அரிய வகை மீன் சிக்கியுள்ளது.

இதுபோன்ற அரிய வகை மீனைப் பார்ப்பது இதுவே முதல் முறை எனவும், துறைமுகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதாகவும் துறைமுக கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த வகை மீன் உட்கொள்ள உகந்தவை அல்ல, இந்த மீன் இனமானது முயல் மீன் (Rhinochimaera atlantica - Broadnose Chimaera) என அழைக்கப்படுகிறது.

மேலும், இது கனடா, கொலம் பியா, பிரான்ஸ், காம்பியா, ஐஸ் லாந்து, மொரிட்டானியா, மெக் சிகோ, நமீபியா, செனகல், தென் னாபிரிக்கா, சூரினாம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் காணப்படுவதாக தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம்



தெரிவித்துள்ளது.

இந்த மீன் Longnose chimaeras குடும்பத்தை ஒத்த இனமாகும் மற்றும் மிதமான கடல்களில் 1,500 மீற்றருக்கும் அதிகமான ஆழத்தில் வாழ்கிறது.

2018 ஆம் ஆண்டு நடத்திய ஆய் வின் பின்னர் இந்த வகை மீன்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக நாரா தெரிவித்துள்ளது. ஒரு மீன் 140 சென்ரி மீற்றர் நீளம் உடையதாக காணப்படும். (ஐ)

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கியதும் பாராளுமன்றை கலையுங்கள்!

## ஜே. வி. பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கிய உடன் பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும் என ஜே. வி. பி. தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கான தீர்மானம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் அன்றைய தினமே பாராளுமன்றத்தை கலைப்பதற்கான தீர்மானத்தையும் சமர்ப்பிக்கவேண்டும் என ஜே. வி. பி. தெரிவித்துள்ளது.

அரசியல் தேவைகளுக்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீக்கப்படவுள்ளது என்ற ஊகங்களுக்கு மத்தியில் ஜே. வி. பி. இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கிய பின்னர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அதிகாரத்தில் இருப்பதற்கு அனுமதிக்க முடியாது என ஜே. வி. பியின் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கிவிட்டு அவர்கள் பாராளுமன்ற அதிகாரத்தை தக்க வைப்பதற்கு அனுமதிக்க முடியாது என குறிப்பிட்டுள்ள அவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கான தீர்மானத்தை கொண்டுவரும் அன்றே பாராளுமன்றத்தை கலைப்பதற்கான தீர்மானத்தையும் அவர்கள் கொண்டுவரவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கவேண்டும் என ஜே. வி. பி. நீண்டகாலமாக குரல் கொடுத்துவருகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கவேண்டும். ஆனால், அதன் போர்வையின் கீழ் நீங்கள் பாராளுமன்ற அதிகாரத்தை தக்கவைக்க அனுமதிக்க முடியாது ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதற்கான மக்கள் ஆணையில்லை - என்றார். (ஐ)

# ஐக்கிய அரபு இராச்சியமும் இலங்கையும் கூட்டு பொருளாதார சபையை நிறுவ முடிவு

கொழும்பு, ஒக். 13

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக கூட்டு பொருளாதார சபையை அமைக்க ஐக்கிய அரபு இராச்சியத்திடம் இலங்கை முன்மொழிந்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை ஐக்கிய அரபு இராச்சியத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்களுக்கான அமைச்சர் அஹமட் பின் அலி சயேக் அலரி மாளிகையில் சந்தித்த பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன்போதே பிரதமரால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

வர்த்தகம், எரிசக்தி மற்றும் சுற்றுலாத் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களில் முதலீடுகளை அதிகரிப்பதற்காக பொருளாதார கூட்டு பேச்சுகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கைகளை ஐக்கிய அரபு இராச்சியத்தின்



அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுக்குழுவில் தூதர் காலித் நாசர் அல்-அமெரி, வெளியுறவு அமைச்சர் அலுவலக இயக்குனர் சுல்தான் அல் மன்சூரி மற்றும் பொருளாதார மற்றும் வணிக விவகாரங்கள் துறையின் துணை இயக்குநர் காடா அல் நபுல்சி ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu 13.10.2023 வெள்ளிக்கிழமை ஈழநாடு
சோபகிருது வருடம், புரட்டாதி 26

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நெருக்கடியின்போது செயலாற்றும் முறைமை

இஸ்லாமிய ஹமாஸ் ஆயுதக் குழு இஸ்ரேல்மீது திடீர் தாக்குதலை மேற்கொண்டிருந்தது. இஸ்ரேலின் சக்தி வாய்ந்த உளவுத்துறையான மொசாட்டின் வரலாற்றில் இது மோசமானதொரு தோல்வியாக கருதப்படுகின்றது. அதேவேளை யூத இனம் நாசி படைகளால் கூட்டாக கொல்லப்பட்ட பின்னர் இடம்பெற்ற மோசமானதொரு கூட்டு யூத கொலையாக இந்தத் தாக்குதல் கருதப்படுகின்றது. 1500இற்கும் மேற்பட்ட யூத மக்கள் கொல்லப்பட்டனர். பலர் பணயக் கைதிகளாக கொண்டு செல்லப்பட்டிருக்கின்றனர். பல யூதப் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கபட்டுள்ளனர் என்று இஸ்ரேலிய அரசாங்கம் குறிப்பிடுகின்றது. இவ்வாறானதொரு நிலையில் இதுவரையில் அரசியல் மோதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரண்டு அரசியல் தரப்புகள் இணைந்த யுத்த கால பாராளுமன்றத்தை ஸ்தாபித்திருக்கின்றன.

நாடு மிகவும் ஆபத்தான சூழலை எதிர்கொண்டிருக்கும் போது எதிர்க்கட்சி அரசியல் செய்து கொண்டிருக்க முடியாதென்பதுதான் இதற்கு பின்னாலுள்ள புரிதல். இதனை இன்னொரு வகையில் கூறுவதானால் ரோம் எரிந்து கொண்டிருக்கும்போது, நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தது போன்று, அரசியல் கட்சிகள், குழுக்கள் இருக்க முடியாது - இருக்கக்கூடாது. 2009இல் யுத்தம் நிறைவுற்ற பின்னர், தமிழ்த் தேசிய பரப்பில் நிகழ்ந்திருக்க வேண்டியதும் இதுதான். ஆனால், நடந்ததோ வேறு. அதாவது, இணைவதற்கு பதிலாக, ஆளுக்கொரு பக்கம் சென்று சண்டையிடும் அரசியலையே தமிழ் தேசிய தரப்புகள் செய்து கொண்டிருந்தன - செய்து கொண்டிருக்கின்றன.

வெறும் தேர்தல் அரசியல் கணக்கின் அடிப்படையிலேயே அனைத்து கட்சிகளும் செயலாற்றி வருகின்றன. இது தொடர்பில் பலரும் பலவாறான முயற்சிகளை எடுத்திருந்த போதிலும்கூட இதுவரையில் தாங்கள் பிடித்த முயலுக்கு ஒரு கொம்பு - என்னும் மனோநிலையிலிருந்து, தமிழ் தேசியர்கள் இறங்கிவரவில்லை. தாங்கள் அரசியலை முன்னெடுப்பதாகக் கூறிக் கொண்டு ஆரம்பித்த இடத்தையே சுற்றிவட்டமிட்டுக் கொண்டிக்கின்றனர். கடந்த பதினான்கு வருடங்களில் தமிழ் தேசிய கட்சிகள் என்போரால் ஓர் அடி கூட, முன்னோக்கி நகர முடியவில்லை. ஆனாலும் ஒரே மாதிரியான அரசியலை முன்னெடுத்து வருகின்றனர். சூழ்நிலை கருதி, அனைவருமாக, ஒன்றிணைந்து, பெறக் கூடியதற்காக, உச்சளவில் இணைந்து செயலாற்றும் பொறிமுறை ஒன்றை கண்டடைய முடியாதவர்களாக இருக்கின்றனர்.

கடந்த பதினான்கு வருடங்களாக தங்களால் எதனையும் சாதிக்க முடியவில்லை - என்பதை புரிந்து கொண்டாலே, மாற்றத்தை நோக்கி சிந்திக்க முடியும். ஆனால், அதற்கும் தமிழ் தேசியர்கள் என்போர் தயாராக இல்லை. ஒரு நகர்வால் தங்களுக்கு வாக்களிக்கும் மக்களுக்கு ஆகக்குறைந்த விடயங்களைக்கூட, பெற்றுக் கொடுக்க முடியாத போது, தங்களின் இருப்பின் பெறுமதி என்ன என்னும் கேள்வியை ஒவ்வொரு கட்சியின் தலைமையும் தங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டும்.

# சைக்கிளிலிருந்து விழுந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்!

*வடமராட்சி ஒக். 13*

*காய்ச்சலுக்கு சிகிச்சை பெற மருமகனுடன் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர் தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்தார்.*

*பருத்தித்துறையில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் வெளிச்சவீடு பகுதியை சேர்ந்த பிலிப்பு இராஜசிங்கம் (வயது 52) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தார்.*

*சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,*

*உயிரிழந்த நபர் கடந்த 7ஆம் திகதி காய்ச்சலுக்கு சிகிச்சை பெறுவதற்காக மந்திகை மருத்துவமனைக்கு தனது மருமகனுடன் சென்றுள்ளார். மருமகன் சைக்கிளை செலுத்த அவர் சைக்கிளின் பின் இருக்கையில் அமர்ந்துள்ளார்.*

*வீதியில் சென்றுகொண்டிருந்த போது விழுந்துள்ளார். இதையடுத்து, அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை அவர் உயிரிழந்தார்.*

*அவரது சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற் கொண்டார்.*

# டெங்கு நோய் தாக்கம் 30 வீதத்தால் அதிகரிப்பு

*கொழும்பு, ஒக். 13*

*டெங்கு நோய் பரவல் 30 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.*

*ஒக்ரோபர் 2ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரையான 40ஆவது வாரத்தில் 684 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் 39ஆவது வாரத்தில் 526 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*39ஆவது வாரத்துடன் ஒப்பிடும்போது 40 வது வாரத்தில் 30 சதவீதம் அதிகமாகும். கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 146 டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பதிவாகியுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் 48.2வீதம் பேர் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளனர்.*

*பிலியந்தலை, மொறட்டுவை, அத்தனகல்ல, களனி, தொம்பே, ராகம, கம்பளை, குண்டசாலை, உடுநுவர, மாத்தளை, பதுளை உள்ளிட்ட 16 பிரிவுகளை டெங்கு அபாய பிரதேசங்களாக சுகாதார மருத்துவ அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர். இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் இதுவரை 65 ஆயிரத்து 479 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அத்துடன், 39 பேர் உயிரிழந்தனர்.*

*ஒருவருக்கு இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால், அது டெங்குவாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. உடனடியாக தகுதியான மருத்துவரை அணுகி சிகிச்சை பெற வேண்டும்.*

*நுளம்புகள் பெருகாதவாறு சுற்றுச்சூழலை பேணுவதன் மூலம் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியும் எனவும் இதனால் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

# விழிப்புணர்வு செயலமர்வு!

*யாழ்ப்பாணம், ஒக். 13*

*யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் தகவல் அறியும் உரிமை சட்டம் சம்பந்தமான, மத குருமார்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 9 - 12 மணி வரை நடைபெறவுள்ளது.*

*692, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சிவ குரு ஆதீனத்தில் நடைபெறும் இந்த செயலமர்வில் பங்கு பெற விரும்புவோர் 077 222 0103 என்ற கைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு முற்பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)*

# பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகம் எஸ்.ரி.எவ். சூட்டில் சந்தேகநபர் பலி

*கொழும்பு, ஒக். 13*

*மீட்டியகொட - தெல்வத்தையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருடன் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேகநபரொருவர் உயிரிழந்துள்ளார்.*


*அண்மையில் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர், குறித்த பகுதியில் இருப்பதாக தகவல் கிடைத்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.*

*கிடைத்த தகவலுக்கமைய, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அங்கு சென்றபோது சந்தேகநபர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.*

*இதன்போது இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தின் போது காயமடைந்த 42 வயதான சந்தேகநபர், பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.*

*பின்னர் சந்தேக நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஒக்ரோபர் - 13 வெள்ளிக்கிழமை**
**சோபகிருது வருடம் - புரட்டாதி 26**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 10.30 - 12.00**
**திதி : சதுர்த்தசி**




**மேடம்**

புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்**

எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**

உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். வெற்றிபெறும் நாள்.

**கடகம்**

கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் எந்த வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். அலைக்கழிக்கப்படுவீர்கள். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**கன்னி**

எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**துலாம்**

எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**விருட்சிகம்**

சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். புதிய வாய்ப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**தனுசு**

இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். தள்ளிப்போன விஷயங்கள் எளிதில் முடியும். தொழில் திருப்தி உண்டாகும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மகரம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் குடும்பத்தில் பல விஷயங்களை நீங்களே பார்க்க வேண்டி இருக்கும். சின்னசின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். நிதானம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**

உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**மீனம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. புது பொறுப்பை ஒப்படைப்பார். தொட்டது துலங்கும் நாள்.

# கோவை இன்னமும் மதவாதிகள் தீவிரவாதிகளின் செயல்பாட்டில்!

## வானதி சீனிவாசன் குற்றச்சாட்டு

சென்னை, ஒக். 13

**எங்களை சட்டப்பேரவையில் பேசுவதற்கு விடுவதில்லை என்று பாஜக உறுப்பினர் வானதி சீனிவாசன் தெரிவித்தார். மேலும் கோவை இன்னும்கூட மத அடிப்படைவாதிகள், தீவிரவாதிகளின் செயல்பாட்டில் இருக்கிறது என்று அவர் கூறினார்.**

**சட்டப்பேரவையில் இருந்து நேற்று முன் தினம் பா.ஜ.க உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.**

**இதுபற்றி பேரவை வளாகத்தில் வானதி சீனிவாசன் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்-**

சட்டப்பேரவையில் முஸ்லிம் கைதிகளின் முன்விடுதலை தொடர்பாக 10 ஆம் திகதி கொண்டு வரப்பட்ட சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது பல்வேறு அரசியல் கட்சிகள் விவாதத்தில் பங்கேற்றன. நோய் பாதிப்பு, வயது முதிர்வு, மாற்றுத்திறனாளி போன்ற கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று பலர் வலியுறுத்தினர். கோவையில் 1998ஆம் ஆண்டு 11 இடங்களுக்கும் மேலாக குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. 58 பேர் உயிரிழந்தனர். 200 பேர் கடுமையாக பாதிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் இன்னும் கூட அந்த பாதிப்பில் இருக்கின்றனர். கொடூரமாக தவறு செய்தவர்களை இந்த அரசு தங்களுடைய வாக்கு வங்கி அரசியலுக்காக இந்த நிலைப்பாட்டை எடுக்கக் கூடாது என சட்டப்பேரவையில் வலியுறுத்துமாறு பாதிக்கப்பட்டவர்கள் எங்களை கேட்கின்றனர்.

கடந்த ஆண்டு கோட்டை சங்கமேஸ்வரர் கோயில் முன்பு நிகழ்ந்த கார் குண்டுவெடிப்பு திட்டமிடப்பட்ட சதிச் செயல். அதனை திமுக அரசு, அது ஒரு விபத்து, சிலிண்டர் வெடிப்பு என்று கூறுகின்றனர். ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்தோடு தொடர்புடையவர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர் என தேசிய புலனாய்வுத் துறையின் குற்றப் பத்திரிகை கூறுகிறது. கோவை இன்னும் கூட மத அடிப்படைவாதிகள், தீவிரவாதிகளின் செயல்பாட்டில் இருப்பதால், இம்மாதிரியான செயல்பாடுகள் எங்கள் பகுதியின் அமைதியை, பாதுகாப்பை பாதிக்கும்.

இது தொடர்பாக சட்டப்பேரவையில் பதிவு செய்ய கவன ஈர்ப்பு தீர்மானத்தை கொண்டு வந்தோம். நான் பேசும்போது வழக்கம்போல பேரவைத் தலைவர் மத்திய பிரதேசம், குஜராத் என சம்பந்தமே இல்லாமல் பதில் பேசுகிறார். அமைச்சர்கள் பதில் சொல்லவேண்டிய இடத்தில் கூட, பேரவை தலைவர் பதில் சொல்கிறார். இன்றும் எங்களை முழுமையாக பேசவிடவில்லை. அதற்காக வெளிநடப்பு செய்தோம்-என்றார். (அ)

# கோடநாடு விவகாரத்தில் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படுவர்

சென்னை, ஒக். 13

கோடநாடு வழக்கு சி.பி.சி.ஐடியிடம் உள்ளது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகே இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி விசாரிக்க தொடங்கியது. சிறப்பு புலனாய்வு மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விசாரணை அறிக்கை விரைவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது. இந்த வழக்கில் யார் யார் தவறு செய்திருக்கிறார்கள் என்பது மிக விரைவில் வரப்போகிறது. அவர் எப்படிப்பட்ட இடத்தில் இருந்தாலும், நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதியாக தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் கோடநாடு விவகாரம் தொடர்பாக சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அப்போது நடந்த விவாதத்தில் ஆர்.வைத்தியலிங்கம் பேசியதாவது:

கோடநாடு பங்களாவில் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் திகதி கொலை, கொள்ளை நடந்துள்ளது. 24 மணி நேரமும் மின்சாரம் தட்டுப்பாடு இல்லாத அந்த பங்களாவில் மின்சாரம் நிறுத்தப்பட்டுள்ளது. சி.சி.ரி.வி கமெரா அணைக்கப்பட்டுள்ளது. அங்கு பணியாற்றியவர் கொலை செய்யப்பட்டுள்ளார். படுகாயங்களுடன் தப்பிச் சென்ற நேபாளத்தை சேர்ந்தவர் எங்கு இருக்கிறார் என்றே தெரியவில்லை. 6 கொலைகள் நடைபெற்றுள்ளன.

முன்னாள் முதல்வர் வீட்டில் நடைபெற்ற கொலைகள் தொடர்பாக ஐஜி, டி.ஜி.பி நேரில் சென்று பார்க்கவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 90 நாட்களில் குற்றவாளிகளை பிடிப்போம் என்று இப்போதுள்ள முதல்வர் சொன்னார். ஆனால், ஆட்சிக்கு வந்து 900 நாட்கள் ஆகிவிட்டது. இரண்டரை ஆண்டுகளாக இந்த ஆட்சி என்ன செய்கிறது. உண்மையான குற்றவாளியை கூண்டில் ஏற்ற வேண்டும். இவ்வாறு பேசினார்.

இதற்கு பதிலளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: கோடநாடு வழக்கு சி.பி.சி.ஐடியிடம் உள்ளது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகே இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி விசாரிக்க தொடங்கியது. சிறப்பு புலனாய்வு மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விசாரணை அறிக்கை விரைவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது. இந்த வழக்கில் யார் யார் தவறு செய்திருக்கிறார்கள் என்பது மிக விரைவில் வரப்போகிறது. அவர் எப்படிப்பட்ட இடத்தில் இருந்தாலும், நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள் என்று உறுதியாக தெரிவித்து கொள்கிறேன்-என்றார். (அ)

# சென்னையில் தி.மு.க. மகளிரணி மாநாடு; சோனியா, பிரியங்காவுக்கு பெரு வரவேற்பு

சென்னை, ஒக். 13

சென்னையில் நாளை நடைபெறும் திமுக மகளிரணி மாநாட்டில் காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி மற்றும் பிரியங்கா காந்தி ஆகியோர் பங்கேற்க உள்ளனர். அவர்களை வரவேற்க தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் பிரம்மாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி, சென்னை சத்தியமூர்த்திபவனில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சென்னையில் நாளை திமுக மகளிரணி மாநாடு நடைபெறஉள்ளது. அதில் சோனியா காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோர் பங்கேற்க சென்னை வருகின்றனர். அவர்களை வரவேற்க பிரம்மாண்ட ஏற்பாடுகளை செய்வது குறித்து குறித்து விவாதிக்க காங்கிரஸ் மாவட்ட தலைவர்கள் கூட்டத்தை கூட்டி இருக்கிறோம்.

பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. மிகப்பெரிய இன அழிப்பை அவர்கள் செய்து வருகிறார்கள். இதை தமிழ்நாடு காங்கிரஸ் வன்மையாக கண்டிக்கிறது.

காவிரி பிரச்னையை முதலில் கையில் எடுத்தது நாங்கள்தான். கர்நாடக காங்கிரஸ் அரசு உரிய நீரை வழங்காததை தமிழ்நாடு காங்கிரஸ் கண்டித்தது. காங்கிரஸ் போராட்டம் நடத்த வேண்டும் என்றால், பாஜகவை சேர்ந்த எடியூரப்பா, பசவராஜ் பொம்மை ஆகியோருக்கு எதிராக தான் போராட்டம் நடத்த வேண்டும். கர்நாடக அரசு 16 ஆயிரம் கனஅடி நீரை திறந்துவிட்டது. அதை எதிர்த்து கலவரம் ஏற்பட்டது. அதை ஆதரித்து பேசியவர்கள் எடியூரப்பாவும், பசவராஜ் பொம்மையும்தான். அவர்களை தமிழக பாஜக எதிர்க்கவில்லை. தமிழக பாஜகவுக்கு காவிரி நீர் பெறுவது முக்கியமில்லை. கர்நாடக காங்கிரஸ் அரசையும், தமிழக திமுக அரசையும் துன்புறுத்த வேண்டும் என்பதுதான் நோக்கம்-என்றார். (அ)

# பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக ஈழத்தமிழர்கள் குரல்கொடுக்கவேண்டும்

## அரசியல், சமூக செயல்பாட்டாளர் அருந்தவபாலன்

யாழ்ப்பாணம், ஒக். 13

**அடக்குமுறைகளையும் யுத்தத்தின் கொடுமைகளையும் அனுபவித்தவர்கள் என்ற வகையில் பலஸ்தீன மக்களின் வலிகளை எம்மால் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். அவர்களின் உரிமைகளுக்காகவும் அமைதியான வாழ்வுக்காகவும் தார்மீக ரீதியான ஆதரவைத் தெரிவிக்கவேண்டியது எமது கடமையாகும் என அரசியல், சமூகச்செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன் வலியுறுத்தியுள்ளார்.**

**இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-**

ஹமாஸ் இயக்கத்தினரின் எறிகணைத் தாக்குதல்களைத் தொடர்ந்து இஸ்ரேலிய பிரதமர் காசா மீதுயுத்தப் பிரகடனத்தை செய்திருப்பதுடன் காசாவை முழுமையாகத் துடைத்தெறிவதற்கான திட்டமிட்டயுத்த நடவடிக்கைகளிலும் இஸ்ரேலியப் படைகள் இறங்கியுள்ளன. இது காசாவில் மிகக் குறுகிய இடப்பரப்பில் வாழ்ந்து வரும் 24 இலட்சத்துக்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் பேரழிவுக்கும்மனிதப் பேரவலத்துக்கும் வழிவகுக்கப் போகிறது. பொதுமக்கள் மீதான எத்தரப்பினரதும் தாக்குதல்கள்ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை என்பதுடன் உலகின் கண்டனத்துக்குமுரியவை.

ஆனால் தமது வாழ்விடங்களை இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்குள் பறிகொடுத்து அகதிகளாகவும் இஸ்ரேலின் அடக்குமுறைக்குள்ளும் பலஸ்தீன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். காசாவில் வாழும் 24 இலட்சம் மக்களுக்கான உணவு, நீர், மின்சாரம் போன்ற அனைத்து அடிப்படைத் தேவைகளின் விநியோகங்களும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்து வருவதுடன் அவற்றின் வழங்கலை இப்போது முழுமையாக இஸ்ரேல் தடை செய்தும் விட்டது. இதேவேளை அம்மக்களின் மீது மிகமோசமான தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. இது பாரிய மனிதப் பேரவலத்தை மத்தியகிழக்கில் தோற்றுவிக்கப் போகிறது.

இதேவேளை மேற்குலக நாடுகளும் அவற்றின் ஊடகங்களும் வழமை போன்று இஸ்ரேலின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் வகையில் செயற்படுவதுடன் ஆதரித்தும் வருகின்றன. இதனால்தான் இஸ்ரேல் ஐ.நாவின் தீர்மானங்களையும் சர்வதேச சட்டங்களையும் தொடர்ந்து புறக்கணித்து வருவதுடன் பலஸ் தீனத்தை முழுமையாக ஆக்கிரமிக்கும் நோக்கிலேயே செயற்பட்டு வருகிறது. இப்போக்குகள் மத்திய கிழக்கில் ஒருபோதும் அமைதியைக் கொண்டு வராது என்பதுடன் இஸ்ரேலிய மக்களும் நிம்மதியாக வாழமுடியாது என்பதை சம்பந்தப்பட்ட தரப்புகள் புரிந்து கொள்ளவேண்டும். அடக்குமுறைகளையும் யுத்தத்தின் கொடுமைகளையும் அனுபவித்தவர்கள் என்ற வகையில் பலஸ்தீன மக்களின் வலிகளை எம்மால் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். அவர்களின் உரிமைகளுக்காகவும் அமைதியான வாழ்வுக்காகவும் தார்மீக ரீதியான ஆதரவைத் தெரிவிக்க வேண்டியது எமது கடமையாகும். இவ்வகையில் எமது தலைவர்கள் தமது இந்திய விசுவாசத் தைஒருபுறம் வைத்துவிட்டு விடுதலையை வேண்டி நிற்கும் ஒரு இனத்தின் பிரதிநிதிகள் என்ற வகையில் பலஸ்தீன மக்களுக்கான தமது ஆதரவைத் தெரிவிக்க வேண்டும்.

இதேவேளை பலஸ்தீனப் போராளிக் குழுக்கள் யதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொண்டு தம் மக்களின் எதிர்காலத்துக்காக இஸ்ரேலை அங்கீகரிக்கத் தயாராக வேண்டும். மறுபுறத்தில் இஸ்ரேல் தன்னால் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பிரதேசங்களில் இருந்து விலகி பலஸ்தீன மக்களின் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும். அமெரிக்கா உட்பட மேற்குலகும் ஐ.நா சபையும் இந்நோக்கில் பயணிக்கவேண்டுமென்றே சமாதானத்தை விரும்பும் மக்கள் எதிர்பார்க்கின்றனர்-என்றுள்ளது.

(அ)

# புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவன் நீரில் அடித்து செல்லப்பட்டு மரணம்!

## கண்டி - தெல்தோட்டையில் சோகம்

கொழும்பு, ஒக். 13

கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெல்தோட்டை விட்டில்வெளி தோட்டத்தில் நேற்று முன் தினம் நீரில் அடித்துச்செல்லப்பட்ட சிறுவன் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருந்த காண்டீபன் திவான் என்ற மாணவரே இவ்வாறு உயிரிழந்தார்.

பாடசாலைக்குச் சென்று, பிரத்தியேக வகுப்பையும் முடித்துக்கொண்டு நேற்று முன் தினம் மாலை வீடு திரும்பும்போது, சிறியதொரு பாலத்தை கடக்க முற்படுகையிலேயே அவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

பிரதேச மக்கள் நேற்று முன் தினம் மாலை முதல் தேடுதலில் ஈடுபட்டனர். இந்நிலையில் விட்டில்வெளி பகுதியில் இருந்து சுமார் 5 கி.மி. தொலைவில் ஓடையில் இருந்து அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த மாணவனுக்கு ஒரு தம்பியும், தங்கையும் உள்ளனர்.

(அ)

# பொகவந்தலாவை வெள்ளத்தில்!

கொழும்பு, ஒக். 13

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக மக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பொகவந்தலாவ பிரதேசத்தில் பெய்து வரும் கடும் மழையினால் கெசல்கமுவ ஓயாவின் கிளை ஆறுகள் பெருக்கெடுத்து பாடசாலைகள் மற்றும் பல தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பொகவந்தலாவ பிரதேசத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் பெய்த கடும் மழையின் காரணமாக, பொகவந்தலாவ சென்மேரிஸ் தேசிய பாடசாலைக்கு சொந்தமான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதோடு, வகுப்பறைகளிலும் நீர் நிரம்பி காணப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது.

சுமார் இரண்டு மணித்தியாலங்களாக பெய்த கடும் மழை காரணமாக பல தேயிலைத் தோட்டங்களுக்குச் செல்லும் வீதிகளும் மழைநீரில் மூழ்கியுள்ளன.

அத்தோடு, நோர்டன்பிரிட்ஜ் பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக விமலசுரேந்திர நீர்த்தேக்கம் நேற்று முன் தினம் பிற்பகல் முதல் நிரம்பி வழிவதாக நீர்த்தேக்கத்திற்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

கனமழை காரணமாக ஹட்டன் நுவரெலியா, ஹற்றன் கொழும்பு பிரதான வீதிகளில் மண்சரிவு ஏற்பட வாய்ப்புகள் இருப்பதாகவும், எனவே, அவ்வீதிகளில் வாகனங்களை செலுத்தும் போது கவனமாக வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் சாரதிகளிடம் கேட்டுள்ளனர்.

(அ)



# இஸ்ரேலில் காணாமல்போயுள்ள என் கணவரை கண்டுபிடித்து தாருங்கள்!

## மனைவி உருக்கமான கோரிக்கை!

கொழும்பு, ஒக். 13

இஸ்ரேலில் ஹமாஸ் போராளிகள் நடத்திய அதிரடி தாக்குதலில் காணாமல் போன இலங்கையர் பற்றிய தகவல்களை அவரது குடும்பத்தினர் பகிர்ந்துள்ளனர்.

இஸ்ரேல் மீதான தாக்குதலில் காணாமல்போன தனது கணவர் தொடர்பான தகவல்களை அந்நாட்டு தூதுவர் மற்றும் உரிய அதிகாரிகள் கண்டுபிடித்து வழங்குமாறு காணாமல்போனவரின் மனைவி ஜயனா மதுவந்தி கேட்டுள்ளார்.

வென்னப்புவ, கொலொஞ்சடிய பிரதேசத்தில் வசிக்கும் பண்டித வாசல முதியன்செலகே சுஜித் நிஷங்க பண்டார யாதவர என்பவரே காணாமல் போயுள்ளார்.

சுஜித் பண்டார யாதவர இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். மதிரிகிரிய பிரதேசத்தில் உள்ள இவரது சொந்த கிராமத்தைச் சேர்ந்த இவருக்கு 13 வயது மகளும் 8 வயது மகனும் உள்ளனர். தனது கல்வியை முடித்துவிட்டு, சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்பு டுபாயில் அவர் பல வேலைகளில் பணியாற்றினார்.

அங்கு பணிபுரியும்போது வென்னப்புவவில் வசிக்கும் ஜயனா மதுவந்தி என்பவரை சந்தித்து காதல் வசப்பட்டார். பின்னர், இருவரும் இலங்கைக்கு வந்து திருமணம் செய்து வாழ்ந்துள்ளனர். திருமணத்தின் பிறகு, அவரது மனைவி வீட்டில் வசித்து வந்த தம்பதியினர், தங்களுக்கென வீடு கட்டி, இரு குழந்தைகளின் கல்வியையும் கவனித்து வந்தனர்.

8 ஆண்டுகளுக்கு முன்பு 2015 இல் நிஷங்க பண்டார மீண்டும் பணிக்காக இஸ்ரேலுக்குப் புறப்பட்டார். 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கைக்கு வந்து சுமார் ஒரு மாதம் தங்கியிருந்த அவர் இஸ்ரேலுக்குத் திரும்பினார்.

"நாங்கள் இருவரும் மிகுந்த நம்பிக்கையுடன் டுபாயிலிருந்து வந்தோம். திருமணமாகி சில காலம் கழித்து, குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்ய கணவர் வெளிநாடு சென்றார். குறிப்பாக இரண்டு குழந்தைகளுக்கும் நன்றாகக் கற்பிப்பது அவசியமாக இருந்தது. எங்களுக்கும் சொந்த வீடு தேவைப்பட்டது.

எனவே, இரண்டு பிள்ளைகளையும் வென்னப்புவவிலுள்ள தனியார் ஆங்கிலப் பாடசாலைக்கு அனுப்பி வைத்தேன். இருவரும் கற்க ஆர்வமாக உள்ளனர். பின்னர் வென்னப்புவ கொலொஞ்சடிய பிரதேசத்தில் வீடு ஒன்றை வாங்கினோம். கணவர் இன்னும் இந்த வீட்டுக்கு வராதது எனக்கு ரொம்ப வருத்தம். வீடியோ அழைப்பு மூலம் அவர் வீட்டை பார்க்கிறார்.

சம்பவத்தன்று அவர் எனக்கு போன் செய்து கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் தாக்குதல் சத்தம் கேட்டது. அப்போது துப்பாக்கிச் சத்தம் கேட்டதாக கூறினார். கவனமாக இருக்க வேண்டுமென்று சொன்னேன். அதன்பின், பல நொடிகள் கடக்கவில்லை, அவரது தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டது. என்ன நடந்தது என்று என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

தொலைக்காட்சியில் பார்த்த பிறகுதான் போரின் தீவிரம் தெரிந்தது.

அவர் என்னைச் சந்திப்பார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. என் கணவர் வருவார் என்று காத்திருக்கிறேன். அப்பாவுக்கு என்ன நடந்தது என்று என் மகன்கள் எப்போதும் கேட்கிறார்கள். எனது மகளுக்கு கொஞ்சம் உடல்நிலை சரியில்லை. இந்த குழந்தைகளின் தந்தையான எனது கணவர் எங்கிருக்கிறார் என்ற தகவலை எப்படியாவது அதிகாரிகளிடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்றார் ஜயனா மதுவந்தி. (அ)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 13

நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த வருடத்தின் கடந்த மாதத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 938 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர்.

இதன்படி நாட்டுக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 10 இலட்சத்தை கடந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

(அ)

# ரணில்-ராஜபக்ஷ அரசாங்கம் தேர்தலை ஒத்திவைக்கச் சதி!

## இடமளியோம் என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஒக். 13

**ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தால் மக்களை ஒடுக்கு முறைக்கு உள்ளாக எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் ஐக்கிய மக்கள் சக்தி இடமளிக்காது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.**

**எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே இவர் இவ்வாறு கூறினார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

ஜனநாயகத்தை சகல விதங்களிலும் மீறி இந்த ஆண்டு மார்ச் மாதம் நடத்தப்பட வேண்டியிருந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தால் கால வரையரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நடக்கவேண்டிய மாகாண சபை தேர்தலையும் நான்கு வருடங்களாக பிற்போட்டுள்ளனர். அவ்வாறே பாராளுமன்றத் தேர்தலையும்,ஜனாதிபதி தேர்தலையும் கூட்டு சதிகள் மூலம் ஒத்திவைக்க மந்திரம் ஓதி வருகின்றனர்.

மக்கள் எதிர்ப்பை அடக்க பல்வேறு சட்ட மூலங்களை கொண்டு வருகின்றனர். ஒரு புறம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்றும் மறுபுறம் நிகழ்நிலை காப்பு என்றும் பல்வேறு சட்டங்களையும் கொண்டுவர



முயற்சிக்கின்றனர்.

மக்கள் கருத்துக்கு இடமளிக்காது ஆட்சியில் தொடர்ந்தும் நீடிக்கவே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மக்களை ஒடுக்கும் எந்த நடவடிக்கைகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் இடமளிக்காது என ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு கூறுகிறோம்.

அரசாங்கத்தின் மக்கள் விரோத சட்ட மூலங்களை எதிர்த்து நாம் நீதிமன்றத்தை நாடியுள்ளோம். பாராளுமன்றத்தில் எதிராக குரல் எழுப்பி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

அவ்வாறே பாராளுமன்றத்திற்கு வெளியே சகலரையும் இணைத்துக் கொண்டு இதற்கு எதிராக செயற்படுவோம். அதற்கான தலைமைத்துவத்தை ஐக்கிய மக்கள் சக்தி வழங்கும்.

நாட்டில் பாதல உலக நடவடிக்கை அதிகரித்துள்ளன. பாதால கொலைகள் அதிகமாக நடந்து வரும் நிலையில் நாட்டிற்கு பொலிஸ் மா அதிபர் ஒருவர் கூட இல்லை.

பொலிஸ்மா அதிபர் பதவி காலம் முடிவடைந்துள்ளது. பொலிஸ் துறையின் நடவடிக்கைகளைக் கூட திறனாக முன்னெடுக்க முடியாதுள்ளது-என்றார். (அ)

# சட்டவிரோதமாக கொண்டு வர முயன்ற 17 மெற்றிக் தொன் உழுந்து மீட்கப்பட்டது

கொழும்பு, ஒக். 13

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வர முயன்ற 17 மெற்றிக் தொன் உழுந்தை சுங்க வருமான கண்காணிப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

அதன்படி, இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலனில் இருந்து சுங்க திணைக்களத்துக்கு அறிவிக்காமல் சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்டுள்ளது.

கொண்டைக்கடலை அடங்கிய கொள்கலனுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த உழுந்து தொகையின் பெறுமதி சுமார் 31 மில்லியன் ரூபா என சுங்க ஊடகப் பேச்சாளர், சுங்கப் பணிப்பாளர் சிவலி அருக்கொட தெரிவித்தார்.

மேலும், உழுந்தின் கையிருப்பை விடுவிக்க முடியுமானால் அரசாங்கத்திற்கு 5.1 மில்லியன் ரூபா வரி இழப்பு ஏற்பட்டிருக்கும் என சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# இஸ்ரேலுக்கு பணியாளர்களை அனுப்பும் நடவடிக்கை நிறுத்தம்

கொழும்பு, ஒக். 13

இஸ்ரேலுக்கு பணியாளர்களை அனுப்பும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலே அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ்வாறு கூறினார்.

அத்துடன், தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு இஸ்ரேலில் உள்ள பணியாளர்



களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

மேலும், இஸ்ரேலில் இருந்து நாடு திரும்புவதற்கு விரும்பும் நபர்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். (அ)



# திடீரென கொழும்பு துறைமுகத்துக்கு வந்தது அமெரிக்க கடற்படைக் கப்பல்

கொழும்பு, ஒக். 13

அமெரிக்க கடற்படைக் கப்பலான புருண்ஸ்விக் நேற்று முன் தினம் புதன்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த கப்பலான 'புருண்ஸ்விக்' 103 மீற்றர் நீளமும், மொத்தம் இருபத்தி நான்கு கடற்படையினரையும் கொண்டுள்ளது.

புருண்ஸ்விக் கப்பல் கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில், கப்பலில் வருகை தந்துள்ளவர்கள் நாட்டிலுள்ள சில சுற்றுலாத் தலங்களுக்குச் செல்ல உள்ளனர்.

புருண்ஸ்விக் கப்பல் எதிர்வரும் 15 ஆம் திகதி இலங்கையில் இருந்து மீண்டும் அதன் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

# பலஸ்தீனத்துக்கே என்றும் எம் ஆதரவு

## கூறுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஒக். 13

"நாம் பாலஸ்தீனம் பக்கம் தான் அன்று நின்றோம். இன்றும் நின்கின்றோம். எதிர்காலத்திலும் நிற்போம்." - என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ, கண்டி தலதா மாளிகைக்கு நேற்று முன் தினம் பயணம் மேற்கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார்.

இதன்போது இஸ்ரேல்-ஹமாஸ் அமைப்புக்கிடையில் நடைபெற்றுவரும் போர் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கே மஹிந்த மேற்கண்டவாறு பதிலளித்தார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க தயாராகும் வர்த்தகர் திலித் ஜயவீர

கொழும்பு, ஒக். 13

மவ்பிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மவ்பிம ஜனதா கட்சியின் புதிய தலைமையகம் நேற்று முன் தினம் புதன்கிழமை கொழும்பு 08, பார்க் அவென்யூ, இலக்கம் 11 இல் உத்தியோக பூர்வமாக திறக்கப்பட்டது.

கட்சியின் தலைவர் திலித் ஜயவீர, கட்சியின் சிரேஷ்ட தலைவர் கலாநிதி ஹேமகுமார நாணயக்கார மற்றும் கட்சியின் முக்கிய செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் உரையாற்றிய கட்சியின் தலைவர் திலித் ஜயவீர,

"குறுகிய கால மற்றும் நீண்டகால பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நிலைத்தன்மையை அடைவதற்கான தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய அரசியல் அமைப்பைக் கோரும் இலங்கையர்க



ளுக்கு மவ்பிம ஜனதா கட்சி ஒரு பாதையாக இருக்கும்.

அரசியல் வெளியில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை மவ்பிம ஜனதா கட்சி நிரப்பும்.

குறுகிய காலத்தில், இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார வீழ்ச்சியை மீண்டும் ஒரு நம்பிக்கையான திசையில் திருப்புவதற்கு விஞ்ஞானரீதியான பொருளாதார வேலைத்திட்டம் சமூகமயப்படுத்தப்பட வேண்டும்.

தவறான கருத்துகளின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட மாற்றங்களுக்குப் பதிலாக இன்னும் உகந்த தீர்வுகள் விவாதிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக இளைஞர் சமூகம் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதன் மூலம் நட்புறவான தொழில்முனைவோரை ஊக்குவிப்பது மற்றும் அந்நியச் செலாவணியை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். அதற்காக உழைக்க மவ்பிம ஜனதா கட்சி தயாராக உள்ளது"-என்றார்.

திலித் ஜயவீரவுடன் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்காலத்தில் கைகோர்க்கக் கூடுமெனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# இலங்கை-ஆஸி. ஒப்பந்தம் ஐந்து வருடங்களுக்கு நீடிப்பு

கொழும்பு, ஒக். 13

இலங்கை-அவுஸ்திரேலியா வர்த்தக மற்றும் அபிவிருத்தி கட்டமைப்பு ஒப்பந்தத்தை மேலும் 5 வருடங்களுக்கு நீடிப்பதற்கான ஒப்பந்தம் நேற்று முன் தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சின் செயலாளர் மற்றும் அவுஸ்திரேலிய தூதுவர் ஆகியோருக்கு இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் சிறு தொழில் முனைவோர் சந்தையில் நுழைய வழிவகை செய்தல், டிஜிற்றல் தொழில்நுட்பத்துக்கு ஆதரவு அளிப்பது உள்ளிட்ட பல விடயங்கள் அடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப சம்பள அதிகரிப்பை வழங்குக!

## யாழ். பல்கலையில் போராட்டம்






யாழ்ப்பாணம், ஒக். 13

**பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக நேற்று மதியம் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**

**அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனம் மற்றும் தொழிற்சங்க கூட்டுக் குழு ஆகியவற்றின் தீர்மானத்திற்கமைவாக நேற்று அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

அந்தவகையில் நேற்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகப் பணியாளர்களை பாதிக்கும் பிரச்னைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அரசாங்கத்தின் காலம் தாழ்த்தும் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தீர்வினை வேண்டியுமே அடையாள ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

மதியம் 12.00 மணியளவில் பல்கலைக்கழக முன்றலில் இடம்பெற்ற இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் "மொழித் தேர்ச்சி கொடுப்பனவை மீள் வழங்கு, பல்கலைக்கழக ஊழியர்களின் இல்லாமல் ஆக்கப்பட்ட சம்பள உயர்வை உடனடியாக வழங்கு, பல்கலைக்கழக




கல்வி சாரா ஊழியர்களின் வெற்றிடங்களை உடனடியாக நிரப்பு, ஊழியர்களின் சேமலாப, நம்பிக்கை ஓய்வூதிய நிதிகளை கொள்ளையடிக்காதே, அரசே அரச பல்கலைக்கழக முறைமையை காப்பாற்று, வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்றாற்போல் சம்பள அதிகரிப்பை வழங்கு" உள்ளிட்ட வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# காணாமல்போனதாகக் கூறப்படும் இலங்கையர் குறித்து தகவலில்லை

கொழும்பு, ஒக். 13

இஸ்ரேல் - பலஸ்தீன மோதலுக்கு மத்தியில் காணாமல்போனதாகக் கூறப்படும் இலங்கையர்கள் தொடர்பில் கண்டறியும் வகையில் மேற்கு காசா பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைத் தூதுவர் தமது விஜயத்தை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு தரப்பினர் விடுத்த அறிவித்தலுக்கு அமைய தமது விஜயத்தை நிறுத்திவிட்டு திரும்ப நேரிட்டதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார்.

போர் சூழலுக்கு மத்தியில் இஸ்ரேலில் தங்கியிருந்த இலங்கையர்கள் இருவர் காணாமல் போயுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த இலங்கையர்கள் தொடர்பில் அறிந்துகொள்ளும் வகையில் நேற்று முன்தினம் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார உள்ளிட்ட பிரதிநிதிகள் மேற்கு காசா பகுதிக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இந்த நிலையில், அந்தப் பகுதியில் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதன் காரணமாக, இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் தூதுவர் உள்ளிட்ட குழுவினரை அங்கிருந்து வெளியேறுமாறு அறிவித்துள்ளனர்.

இந்த பின்னணியில், காணாமல் போனதாகக் கூறப்படும் இலங்கையர்கள் தொடர்பில் உரிய தகவல்களை வழங்க முடியாதுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார். (அ)

# நியூசிலாந்து பொதுத் தேர்தலில் களமிறங்கும் இலங்கைத் தமிழர்

வெலிங்டன், ஒக். 13

நியூசிலாந்து தேர்தலில் தேசியக் கட்சி தேர்தல் வேட்பாளர் பட்டியலில் ஒரு இலங்கைத் தமிழர் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியுசிலாந்தில் எதிர்வரும் சனிக்கிழமை பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் முன்னாள் நியுசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் பிரதிநிதித்துவப்படுத்திய ஆளும் தொழில் கட்சிக்கும் எதிர்க்கட்சியான தேசியக் கட்சிக்கும் இடையில் போட்டி நிலவுகிறது.

இரு கட்சிகளுக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் வாய்ப்புகள் குறைவு. ஆயினும் சிறு கட்சிகள் துணை கொண்டு தேசியக் கட்சி ஆட்சி அமைக்கும் வாய்ப்புகள் அதிகம் என கருத்துக் கணிப்புகள் சொல்கின்றன.

இந்தத் தேர்தலில் தேசியக் கட்சி தேசிய வேட்பாளர் பட்டியலில் இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட பொறியியல் ஆலோசகர் செந்தூரன் அருளானந்தம் இடம்பெற்றுள்ளார்.

அவர் இங்கிலாந்து, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்தில் பெரும் கட்டுமானத் திட்டங்களில் ஆலோசகராக பணியாற்றி உள்ளார்.

இவர் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கிளிநொச்சி பிரதி பொலிஸ்மா அதிபராக உப்புல செனவிரத்ன



கிளிநொச்சி, ஒக். 13

கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக உப்புல செனவிரத்ன நேற்று பதவியேற்றார்.

பதவியேற்பு நிகழ்வு கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் நேற்று காலை இடம் பெற்றது.

சமய அனுஷ்டானங்கள் இடம்பெற்று மதத் தலைவர்களின் ஆசியைப் பெற்றுக் கொண்ட பின்னர் வைபவ ரீதியாக காலை 10.00மணியளவில் பிரதி பொலிஸ்மா அதிபர் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

நேற்றைய பதவியேற்பு நிகழ்வில் கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மற்றும் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# கொக்குவில் பிரம்படி படுகொலையின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 13

கொக்குவில் பிரம்படி படுகொலையின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு இதே மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் கொக்குவில் பிரம்படி பகுதியில் 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட கோர சம்பவத்தின் 36ஆவது ஆண்டு நினைவேந்தலே நேற்று முன்னெடுக்கப்பட்டது.



நல்லூர் பிரதேச சபையின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் இறந்தவர்களின் உறவுகளால் இந்த நினைவு கூரல் நிகழ்வு நடத்தப்பட்டது.

இதன்போது வீதியோரமாக அமைந்துள்ள நினைவுத் தூவியில் சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (அ)

# களு பாலத்தை அண்டி தாழிறங்கியது நிலம்!

கொழும்பு, ஒக். 13

ரேந்தபொல - அம்பேவெல வீதியின் களு பாலத்தை அண்மித்த பகுதியில் நிலம் தாழிறங்கியதால் வாகன போக்குவரத்து பாதிப்படைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, குறித்த பகுதியூடாக செல்லும் சாரதிகள் மாற்று வழியை பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

தற்போது நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாகவே இவ்வாறு போக்குவரத்து பாதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, குறித்த வீதியின் கறுப்பு பாலத்திற்கு அருகிலேயே சிறிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனால், இந்த வீதியினூடாக பயணித்த முச்சக்கர வண்டியொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, முச்சக்கர வண்டியிலிருந்த சாரதி உட்பட நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

தற்போது அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

# ஆக்கிரமிக்கப்படும் கங்குவேலிக்குளம்!

## அப்பகுதி விவசாயிகள் கவலை





திருமலை, ஒக். 13

**மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கங்குவேலி குளமானது சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதாகவும் அதற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விவசாய சம்மேளத்தினரால் மூதூர் பிரதேச செயலாளர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என விவசாய சம்மேளனம் தெரிவிக்கின்றது.**

இது தொடர்பில் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் பின்னர் ஆளுநரை சந்தித்து இவ்விடயம் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது உடனடியாக இதனை தடுத்து நிறுத்துமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும், இதனையடுத்து ஆளுநரின் பணிப்புரைக்கமைய திருகோணமலை பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளரையும் சந்தித்து உரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் புதன்கிழமைவரை குறித்த சட்டவிரோத நடவடிக்கை தொடர்ந்தாகவும் சம்மேளன உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

(அ)





# விசேட தேவையுடையவர்களை சமூகமயப்படுத்த செயலமர்வு

அம்பாறை, ஒக். 13

விஷேட தேவையுடையோர்களை சமூகமயப்படுத்துதல் மற்றும் அவர்களுக்கு சிறந்த சமூக மனப்பாங்கினை கட்டியெழுப்புதல் சம்பந்தமாக சமூகத் தலைவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயலமர்வொன்று அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அம்பாறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சமாதி அகலதொடுவ தலைமையில் நடந்த மேற்படி நிகழ்வில் சிரேஷ்ட உளவியல் ஆலோசகர் சுணில் குணரெட்ண கலந்துகொண்டார்.

டச் லங்கா பிரன்ட்சிப் பௌண்டேசனுடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் ஊனமுற்றோரின் சட்ட நிலை, அவர்கள் பெறும் சேவைகள், தொடர்பு செயல்முறை சம்பந்தமாக விரிவாக ஆராயப்பட்டது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள கரங்காவ, கெமுனுபுர, திஸ்ஸபுர, நவகம்புர, மிஹிதுபுர, சத்தாதிஸ்ஸபுர ஆகிய கிராம சேவகர் பிரிவிலுள்ள விஷேட தேவையுடையோர்கள் தொடர்பாக இந்த செயலமர்வில் விஷேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் சமூக சேவை அலுவலகர்கள், கிராம சேவை உத்தியோகஸ்தர்கள் மற்றும் சமூக பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். (அ)

# அமெரிக்க சர்வதேச மதக் குழு கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு



திருமலை, ஒக். 13

அமெரிக்க சர்வதேச மத சுதந்திரத்திற்கான ஆணையாளர் டேவிட் கெரிக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை திகதி ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில், சமய நடவடிக்கைகள் தொடர்பான தற்போதைய நிலைமை குறித்து கலந்துரையாடியதுடன், கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து சமூகத்தினரின் மத உரிமைகளை பாதுகாப்பதில் ஆளுநரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி பேசப்பட்ட அதே வேளை, ஆளுநரின் சிறந்த நடவடிக்கைகளுக்கு அமெரிக்க சர்வதேச மத சுதந்திரத்திற்கான ஆணையாளர் டேவிட் கெரி உள்ளிட்ட குழுவினர் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

# நாவிதன்வெளி பாடசாலையில் மாணவர் பாராளுமன்ற தேர்தல்!



அம்பாறை, ஒக். 13

நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய மாணவர் பாராளுமன்ற நிகழ்வு வித்தியாலய அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை பாடசாலையில் நடைபெற்றது.

அதற்கு சம்மாந்துறை வலய தேர்தல் தொடர்பான உத்தியோகத்தர் உதவிக்கல்விப் பணிப்பாளர் நைரோஸ்கான், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கண்காணிப்பாளர்களாக சமுகமளித்திருந்தனர்.

பாராளுமன்ற தேர்தல் சட்ட திட்டங்களின் படி முறைப்படி இத்தேர்தல் இடம்பெற்றது. (அ)

# யுனிசெவ் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஹோலிகுறோஸ் பாடசாலை தரிசிப்பு!

## அபிவிருத்திக்கான வேலைத் திட்டம் குறித்து மதிப்பீடு

காரைதீவு, ஒக். 13

யுனிசெவ் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று முன்தினம் சம்மாந்துறை வலயத்தின் சொறிக்கல்முனை ஹோலி குறோஸ் மகா வித்தியாலயத்திற்கு விஜயம் செய்தது.

அபிவிருத்திக்கான விளையாட்டு என்ற நிகழ்ச்சி திட்டத்தை மதிப்பீடு செய்வதற்காக வருகை தந்த இந்த குழுவினர், விவியன் ஹாவே வொங்க் தலைமையில், பாடசாலைத் தரிசிப்பையும், கலந்துரையாடலையும் மேற்கொண்டார்கள்.

முன்னதாக பாடசாலை அதிபர் அருட்சகோதரி சிறிய புஷ்பம் தலைமையில் குழுவினருக்கு பாரம்பரிய மற்றும் பாண்ட் வாத்தியம் சகிதம் பெருவரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆஸ்திரேலிய பிரதிநிதிகள் குழுவின் தலைவர் விவியன் ஹாவே வொங்க் தலைமையிலான குழுவில்,

கிழக்கு மாகாண யுனிசெப் பொறுப்பாளர் நிபால் அலாவுதீன், கிழக்கு மாகாண கல்வி திணைக்கள பிரதிநிதி எஸ். சஹீத் , இவ் வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான சம்மாந்துறை வலய உடற்கல்விப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள் .






அங்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுடன் யுனிசெப் பிரதிநிதிகள் வேலைத்திட்டம் தொடர்பாக நேரடியாக கலந்துரையாடினர்.

மாணவர்களின் செயன்முறை விளக்க பயிற்சியையும் பார்வையிட்டார்கள்.

இறுதியில், யுனிசெப் அவுஸ்திரேலியா பிரதிநிதிகள் வேலைத் திட்டம் திருப்தி அளித்ததாக தெரிவித்தனர்.

(அ)

# ஹமாஸ் பூமியிலிருந்தே துடைத்து அழிக்கப்படும்

## இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் சூளுரை

ஜெருசலேம், ஒக். 13

**இஸ்ரேலின் புதிதாக அறிவிக்கப்பட்ட போர் அமைச்சரவையில் பேசிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட், இந்த பூமியிலிருந்தே ஹமாஸை அழிப்பதாக உறுதியளித்தார்.**

**இஸ்ரேல்- பலஸ்தீனம் இரண்டும் சிக்கலான வரலாற்று பாரம்பரியத்துடன், ஒரே பகுதிக்கு உரிமைகோரி வருகிறார்கள். எனினும், மேற்கு நாடுகளின் துணையுடன் இஸ்ரேல் பலாத்காரமாக, பலஸ்தீனியர்களின் வாழிடங்களை கைப்பற்றியுள்ளது. இந்த மோதல் பின்னணியில், கடந்த சனிக்கிழமை நூற்றுக்கணக்கான ஹமாஸ் போராளிகள் தெற்கு இஸ்ரேலுக்குள் நுழைந்து பேரழிவுகரமான தாக்குதலை நடத்தினர். இதில் குறைந்தது 1,200 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.**

**பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட் மேலும் தெரிவிக்கையில்-**

ஹமாஸ் - காசா இஸ்லாமிய அரசு - பூமியின் முகத்திலிருந்து அழிக்கப்படும். அது தொடராது. இஸ்ரேலிய குழந்தைகள் கொல்லப்படும் சூழ்நிலை இருக்காது, நாங்கள் அனைவரும் எங்கள் வேலையைச் செய்கிறோம்- என்றார்.

ஹமாஸ் தாக்குதலை “உலகம் கண்டிராத மிக மோசமான பயங்கரவாத தாக்குதல்” என்று கேலண்ட் விவரித்தார். மேலும் அவர் “ஒன்றாகக் கட்டப்பட்டு கொலை செய்யப்பட்ட குழந்தைகள், மக்கள் எரிக்கப்பட்ட, காட்டுமிராண்டித்தனமான செயல்கள், 1945 முதல் யூத மக்கள் இப்படி பாதிக்கப்படவில்லை” என்று அவர் மேற்கோள் காட்டினார்.

அவருக்கு முன் பேசிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவும், “ஒவ்வொரு ஹமாஸ் உறுப்பினரும் இறந்த மனிதர்கள்” என்றார்.

“நாங்கள் வேட்டையாடும் மிருகங்களைப் பார்த்தோம். நாம் எதிர்கொள்ளும் காட்டுமிராண்டிகளைப் பார்த்தோம். ஒரு கொடூரமான எதிரியைக் கண்டோம். ஐ.எஸ்.ஐ.எஸ்ஸை விட மோசமான எதிரி. சிறுவர்கள் மற்றும் சிறுமியர் கட்டப்பட்டு, தலையில் சுடப்பட்டதைப் பார்த்தோம். ஆண்களும் பெண்களும் உயிருடன் எரிக்கப்பட்டனர். இளம் பெண்கள் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். போராளிகள் தலை துண்டிக்கப்பட்டனர். ஒரு இடத்தில், அவர்களை ரயர் போட்டு தீ வைத்து, உயிருடன் எரித்தனர்.



எவ்வளவு திடுக்கிடும் கொடுமை. எவ்வளவு பெரிய வலி,” என்று பெஞ்சமின் நெத்தன்யாகு கூறினார்.

முன்னதாக புதன்கிழமை, நெத்தன்யாகு மற்றும் எதிர்க் கட்சிகளில் ஒன்றான தேசிய ஒற்றுமை கட்சித் தலைவர் பென்னி காண்ட்ஸ் இணைந்து “தேசிய அவசரகால அரசாங்கத்தை” அமைப்பதாக அறிவித்தனர்.

ஏற்பாட்டின் ஒரு பகுதியாக, நெத்தன்யாகு, பென்னி காண்ட்ஸ் ஒரு போர் அமைச்சரவையை உருவாக்கியுள்ளனர். இதில், பென்னி காண்ட்ஸின் கட்சியை சேர்ந்த மேலும் நான்கு உறுப்பினர்கள் இணைக்கப்பட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் யாயர் லாபிட் புதிய கூட்டணியில் சேரவில்லை.

இஸ்ரேலிய அரசியலில் ஏற்பட்டுள்ள இந்த வியத்தகு மாற்றம் சில நாட்களுக்கு முன்னர் வரை நினைத்துப் பார்க்க முடியாததாகக் கருதப்பட்டது. இஸ்ரேலின் நீதித்துறையை வளைக்கும் நெத்தன்யாகு கூட்டணியின் முயற்சிக்கு எதிராக காண்ட்ஸ் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தார். ஆனால், ஹமாஸின் அடி, இரு தரப்பையும் இணைத்துள்ளது. தேசத்தின் சார்பாக முயற்சிகளை ஒன்றிணைக்க அரசியலை ஒதுக்கி வைக்க முடிவு செய்ததாக காண்ட்ஸும் பிரதம மந்திரியும் கூறினர்.

“யூத தேசம் ஒன்றுபட்டுள்ளது, இன்று அதன் தலைமையும் ஒன்றுபட்டுள்ளது” என்று நெத்தன்யாகு, கேலண்ட் மற்றும் காண்ட்ஸுடன் தொலைக்காட்சி கருத்துக்களில் கூறினார். “எங்கள் தேசத்தின் தலைவிதி ஆபத்தில் இருப்பதால், மற்ற எல்லா விஷயங்களையும் நாங்கள் ஒதுக்கி வைக்கிறோம். இஸ்ரேல் குடிமக்கள் சார்பாக, இஸ்ரேல் தேசத்திற்காக தோளோடு தோள் சேர்ந்து பணியாற்றுவோம்” என்று அவர் குறிப்பிட்டார். (அ)



# தடை செய்த வெள்ளை பொஸ்பரஸ் குண்டை காசாவில் வீசும் இஸ்ரேல்?

ஜெருசலேம், ஒக். 13

பலஸ்தீனிய ஹமாஸ் போராளிகளின் தாக்குதலைத் தொடர்ந்து காசாவில் பொதுமக்களை குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதன்பேது, மக்கள் தொகை அதிகம் உள்ள காசா பகுதிகளில் தடை செய்யப்பட்ட வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகளைப் பயன்படுத்துவதாக பலஸ்தீனிய வஃபா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பூமியில் மிகவும் நெரிசலான இடங்களில் ஒன்றாக காசா சொல்லப்படுவதுண்டு. இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் சுமார் 362 சதுர கிலோ மீற்றர் மட்டுமே உள்ள காசா நிலப்பரப்பில் நெரிசலில் வசிக்கின்றனர்.

பாரம்பரிய பலஸ்தீனிய மக்களின் வாழிடத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்து, பலஸ்தீனிய மக்களை, குறுகிய நிலத்தில் அடைத்து, முற்றுகையிட்டுள்ளது.

இதனிடையேதான், காசாவின் நெரிசலான இடங்களை குறிவைத்து வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகளை இஸ்ரேல் இராணுவம் பயன்படுத்துவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

காசாவில் உள்ள அல்-கராமா பகுதியில் இந்த குண்டுவீசப்பட்டுள்ளது.

வெள்ளை பொஸ்பரஸ் குண்டு என்பது வெள்ளை நிறம் மற்றும் சில நேரங்களில் அது வெளிர் மஞ்சள் நிறமாக எரியும். இவை பூண்டின் வாசனையைப் பரப்பும் மெழுகுப் பொருள். அது, ஒட்சிசனுடன் தொடர்பு கொண்டவுடன் எரியத் தொடங்குகிறது. இந்த குண்டுகள் வெடித்த பிறகு, உடனடியாக வெப்ப நிலை 800 டிகிரியை எட்டும் என்று மதிப்பிடப்படுகிறது.

வெட்டவெளியில் பொஸ்பரஸ் குண்டு வீசப்படும்பட்சத்தில், அது நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர் சுற்றளவுக்கு பரவும். வெடித்துச் சிதறும்போது மிக அடர்த்தியான வெண் புகை மண்டலத்தை உருவாக்கும். இதனால் தாக்குதல் நடத்தும் படைகளுக்கு தற்காப்பு கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. வெள்ளை பொஸ்பரஸ் தரையில் வேகமாக படர்ந்து விரைவாக தீயை ஏற்படுத்தும். இந்த வகை குண்டுகளை ஆள்நடமாட்டம் இல்லாத வெட்டவெளி பகுதிகளில் பயன்படுத்த மட்டுமே இராணுவச் சட்டங்கள் அனுமதிக்கிறது. பொதுமக்கள் மத்தியில் உள்ள இராணுவ இலக்குகளிற்கு எதிராக கூட பயன்படுத்த முடியாது.

ஆனால், பலஸ்தீனியர்கள் மீது சாதாரண மனிதாபிமான சட்டங்களை கூட கடைப்பிடிக்காத இஸ்ரேல், எப்படி பொஸ்பரஸ் தடையை கண்டுகொள்ளுமென எதிர்பார்க்க முடியும்?

இந்த குண்டுகள் மக்கள் மீது விழுந்தால் தோலில் தீக்காயங்கள் ஏற்படுகின்றன. குழந்தைகளுக்கு மூச்சுத் திணறல் உள்ளிட்ட உபாதைகள் ஏற்படுகின்றன. இந்தப் புகையை சுவாசிப்பதால் புற்றுநோய், குறிப்பாக இரத்தப் புற்றுநோய் ஏற்படலாம். மேலும், மனிதர்கள் சில சமயங்களில் இறப்பை தழுவுவது மட்டுமல்ல, தீ தோலில் சிறிதளவு விழுந்தாலும் திசு மற்றும் எலும்பில் ஆழமாக ஊடுருவி கடுமையான தீக்காயங்களை ஏற்படுத்துவதுடன் உறுப்புகளை சிதைக்கும் வாய்ப்புள்ளது என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். இதனால், மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் இப்போது மட்டுமல்ல, 2006 லெபனான் போரின் போது ஹிஸ்புல்லா இயக்கத்துக்கு எதிராக பொஸ்பரஸ் குண்டுகளைப் பயன்படுத்தியதாக ஒப்புக்கொண்டது. மேலும், 2008-2009 காசா போரின்போதும் வெள்ளை பொஸ்பரஸை இஸ்ரேல் ராணுவம் பயன்படுத்தியதாக பல மனித உரிமைகள் குழுக்கள் குற்றம்சுமத்தி இருந்தன. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் கூட இவ்வகை குண்டுகளை ஒருமுறை பயன்படுத்தியுள்ளனர். சிரிய போரிலும் இந்தக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன.

இலங்கை போரிலும், இராணுவம் பயன்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டது. (அ)

# காஸா பல்கலைக்கழகத்தின் மீது இஸ்ரேல் விமானப்படை தாக்குதல்!

ஜெருசலேம், ஒக். 13

காசாவில் உள்ள இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளதை இஸ்ரேல் விமானப்படை உறுதி செய்துள்ளது.

காசா பல்கலைக்கழகம் தனது தாக்குதலில் அழிக்கப்பட்டதை ருவிட்டரில் இஸ்ரேல் விமானப்படை உறுதி செய்துள்ளது.

ஹமாஸ் பொறியியலாளர்களுக்கு பயிற்சி வழங்கும் முக்கிய நிலையமாக காணப்பட்டதால் அதனை குண்டு வீசி அழித்துள்ளதாக இஸ்ரேலிய



விமானப்படை தெரிவித்துள்ளது.

இங்கு ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (அ)

# தேர்தலைப் பிற்போடும் அதிகாரம் அரசாங்கத்துக்கு ஒருபோதுமில்லை

## பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 13

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடும் அதிகாரம் அரசாங்கத்துக்கு கிடையாது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதாக தேர்தல் ஆணைக்குழு இதுவரை அறிவிக்கவில்லை.

அரசாங்கமும் தேர்தலை பிற்போடவில்லை. தேர்தலை பிற்போடும் அதிகாரம் அரசாங்கத்துக்கு இல்லை.

அரசாங்கம் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக தாக்கல் செய்திருக்கும் வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கு ஜனநாயகத்துக்கு விராதேமான முறையில் முயற்சித்து வருகிறது.

எனினும், பாராளுமன்றின் அனுமதி இல்லாமல் வேட்புமனுவை நிராகரிக்க முடியாது.



உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு உறுதியான நிலைப்பாட்டிலேயே இருக்கிறது.

வேட்புமனுக்கள் கோரப்பட்டு, தேர்தல் நடத்துவதற்கு இருக்கும் நிலையில், வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கு மாற்றமாக தேர்தலை நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தேர்தல் ஆணைக்குழு இருக்கிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பது தொடர்பாக நீதிமன்றில் பல வழக்குகளும் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நீதிமன்றம் ஊடாகவோ அல்லது அரசாங்கத்திடமிருந்தோ நிதியை பெற்று உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு மிக விரைவில் நடவடிக்கை எடுக்கும் என நாம் நம்புகிறோம்-என்றார்.

(அ)

# தெற்கு அதிவேக வீதியில் மண்சரிவு

கொழும்பு, ஒக். 13

மண் சரிவு காரணமாக தெற்கு அதிவேக வீதியில் பின்னதுவ மற்றும் இமதுவ பகுதிக்கு இடையிலான போக்குவரத்து தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் இணைந்து தற்போது வீதியை சீர் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் எல்.வி.எஸ்.வீரக்கோன் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் பிற்பகல் பெய்த மழையுடன் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக பின்னதுவ மற்றும் இமதுவ இடையிலான 102 கிலோ மீற்றர் பகுதி வாகன போக்குவரத்து தடைப்பட்டது.

எவ்வாறாயினும், நான்கு பாதைகளில் இரண்டு பாதைகள் புனரமைக்கப்பட்டு போக்குவரத்துக்காக திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எல்.வி.எஸ்.வீரகோன் தெரிவித்தார்.

இதேவேளை, மண்சரிவு ஏற்பட்ட இடத்தை இன்று ஆய்வு செய்து தேவையான குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வுகள் வழங்கப்படும் என தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ஆசிறி கருணாவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, மண் சரிவு ஏற்பட்டபோது குறித்த இடத்தை பார்வையிடச் சென்ற பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் உட்பட ஏழு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

6 பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் இவ்வாறு காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

(அ)

# டெங்கு தொற்று அதிகரிப்பு

National Dengue Control Unit
Ministry of Health, Nutrition and Indigenous Medicine

கொழும்பு, ஒக். 13

டெங்கு நோய் பரவல் 30 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் 2ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரையான 40ஆவது வாரத்தில் 684 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், 39ஆவது வாரத்தில் 526 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

39 ஆவது வாரத்துடன் ஒப்பிடும்போது 40 ஆவது வாரத்தில் 30 சதவீதம் அதிகமாகும். கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 146 டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பதிவாகியுள்ளதுடன், மொத்த பாதிக்கப்பட்டவர்களில் 48.2 வீதம் பேர் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளனர்.

பிலியந்தலை, மொரட்டுவ, அத்தனகல்ல, களனி, தொம்பே, ராகம, கம்பளை, குண்டசாலை, உடுநுவர, மாத்தளை, பதுளை உள்ளிட்ட 16 பிரிவுகளை டெங்கு அபாய பிரதேசங்களாக சுகாதார வைத்திய அதிகாரிகள் அடையாளம் காண்டுள்ளனர். இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் இதுவரை 65,479 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன் 39 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஒருவருக்கு இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால், அது டெங்குவாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. உடனடியாக தகுதியான மருத்துவரை அணுகி சிகிச்சை பெற வேண்டும்.

நுளம்புகள் பெருக முடியாதவாறு சுற்றுச்சூழலை பேணுவதன் மூலம் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியும் எனவும் இதனால் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ)

# தம்புள்ளை-மாத்தளை வீதியில் நடந்த விபத்தில் பெண் மரணம்!

கொழும்பு, ஒக். 13

தம்புள்ளை - மாத்தளை பிரதான வீதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

பெண்ணொருவர் தனது 4 வயதுக் குழந்தையை ஏற்றிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையிலேயே கவுடுபெலெலல்ல பிரதேசத்தில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து காயமடைந்த இருவரும் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் குறித்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்நிலையில் உயிரிழந்தவர் பள்ளியவத்தை, மஹவெல பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

(அ)

# செயல்திறனுள்ள அரச சேவையை நாட்டில் உருவாக்குவதே நோக்கம்!

## ஜகத் குமார எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13

இலங்கையில் அரச நிறுவனங்களின் கட்டமைப்பை வலுப்படுத்தவும், மக்களுக்கு மேலும் சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் தொடர் வழிகாட்டுதல்களை தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறவேண்டிய அரசாங் கமொன்று பற்றிய துறை சார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் ஜகத் குமார தெரிவித்தார்.

இதற்காக அனைத்து அரச அதிகாரிகள், மக்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் கருத்துக்களையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் நடைபெறும் அனைத்துத் தேர்தல்களின் போதும் பெரும்பாலும் மாற்றுத் திறனாளிகள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். அவர்கள் தடைகளின்றி தமது வாக்குகளை அளிக்கக்கூடிய வகையில் எதிர்காலத்தில் நடைபெறும் அனைத்துத் தேர்தல்களின் போதும் மாற்றுத் திறனாளிகளுக்காக விசேட அடையாள அட்டை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு



வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

மேலும், வாக்களிக்கப் பயன்படுத்தப்படும் மையை இறக்குமதி செய்வதற்கு அதிகப் பணம் செலவாகின்றது.

தற்போது தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் வாக்களிப்பில் முறைகேடுகளை செய்ய முடியாது. எனவே, தேர்தலுக்கான செலவினங்களைக் குறைப்பதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமெனவும் குழு பரிந்துரைத்துள்ளது.

தற்போது மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பதில்லை. அதனால் பொதுமக்கள் தமக்கு அவசியமான சேவைகளை பெற்றுக் கொள்வதில் பல்வேறு பிரச்னைகளைச் சந்திக்கின்றனர்.

மேலும் முறையற்ற விதத்தில் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கப்படுவதாக கடந்த காலங்களில் பொதுமக்களால் பல்வேறு விமர்சனங்களும் இந்த மாகாண சபைகள் மீது சுமத்தப்பட்டன. அரச நிதி வீணடிக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

எனவே, எதிர்காலத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாகாண சபைகளுக்கு நிதி வழங்குவதற்கு முறையான புதிய வேலைத்திட்டம் ஒன்று அவசியமாகின்றது. அது தொடர்பில் எமது குழு கலந்துரையாடிவருகின்றது.

வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்றை உருவாக்குவதற்காகவும் நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும் அனைத்து தரப்பினரினதும் ஆலோசனைகளுடன் கூடிய வழிகாட்டல்களைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளோம். இதற்காக துறைசார் வல்லுநர்கள், கல்வியியலாளர்கள், உள்ளிட்ட பல்வேறு நிபுணர்களிடம் குழு கலந்துரையாடி வருகின்றது.

நாட்டில் இடம்பெறும் விடயங்கள் குறித்து முறையான விசாரணையின்றி அதன் உண்மைத் தன்மை தொடர்பில் உறுதிப்படுத்த முன்னரே முறையற்ற விதத்தில் பல்வேறு சமூக ஊடகங்களில் அவை பகிரப்படுகின்றன. இதன் காரணமாக நாட்டில் மோதல்கள் உட்பட பல அசம்பாவிதங்கள் இடம்பெறுவது மாத்திரமன்றி சமூக அந்தஸ்துள்ள பலரின் நற்பெயருக்கு களங்கமும் ஏற்படுகின்றது. எனவே, சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த முறையான பொறிமுறையொன்று அவசியமாகும்-என்றார்.

(அ)

## காய்சலால்...

ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 6ஆம் திகதி காய்ச்சலால் பீடிக்கப்பட்ட தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தார். பின்னர், வல்வெட்டித்துறையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட அவர் பின்னர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கிருந்து யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். இவரின் மரணம் தொடர்பில் மருத்துவமனையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ஐ-02)

## நாட்டின்...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இன்று உலகில் பெரும்பான்மையானவர்கள் இளம் தலைவர்களாக உள்ளனர். அதனால் கட்சித் தலைவராகும் தகுதி நாமல் ராஜபக்சவுக்கும் உண்டு. மக்களின் ஆதரவும் கட்சியின் ஆதரவும் நாமல் ராஜபக்ஷவுக்கு இருப்பதால் அவர் நாட்டின் தலைவராக வருவதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்த தலைவராகவும் - ஜனாதிபதி வேட்பாளராகவும் நாமல் ராஜபக்ஷவை நியமிக்க வேண்டுமென அந்தக் கட்சியினர் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையிலேயே மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஐ)

## ஐ.எம்.எவ்விடம்...

இரண்டாவது தவணையாக 33. 4 கோடி டொலர் கடன்கள் வழங்கப்படுவதற்கு பணியாளர் அளவிலான ஒப்பந்தம் தேவைப்படும் முதல் படியாகும்.

ஐ. எம். எவ். குழு அடுத்த சுற்று நிதியுதவியில் கையொப்பமிடுவதற்கு முன், இலங்கைக்கு அந்த ஒப்பந்தம் மற்றும் அதன் கடன் வழங்குநர்களுடன் மறுசீரமைப்பு விதிமுறைகள் குறித்த தனி ஒப்பந்தங்கள் தேவை.

கடன் மறுசீரமைப்பு குறித்த பேச்சுகளை இந்த வாரம் முடிக்கத் தவறினால் ஐ. எம். எவ். நிதியுதவி திட்டத்தை நிறுத்த முடியாது, இருப்பினும் அது அதன் முன்னேற்றத்தை தாமதப்படுத்தலாம்.

இதனிடையே, 420 கோடி டொலர் கடனை மறுசீரமைக்க சீனா இணங்கியுள்ளது. இந்த இணக்கம் இலங்கைக்கு சாதகமான நிலையை எட்ட வழிசமைக்கும் என்று சர்வதேச ஊடகமான புளூம்பேர்க் தெரிவித்துள்ளது. (ஐ)

## சி.சி.ரீவி....

திரையில் இந்தக் காட்சிகள் காட்சியிடப்பட்டன. உரிய ஆதாரங்களை பதிவு செய்த நீதிமன்றம், இந்த வழக்கில் சாட்சிகளின் அடையாளத்தை ஊடகங்களுக்கு வெளியிட வேண்டாம் என்று உத்தரவிட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்த வழக்கின் சாட்சிகளின் அடையாளத்தை ஊடகங்களுக்கு வெளியிடுவதைத் தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திருமதி ஹிரிபிரியா ஜயசுந்தர விடுத்த கோரிக்கைக்கு அமைய, இந்த நீதிமன்ற அமர்வு மேற்கண்டவாறு தீர்ப்பளித்தது.

மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தோட்டவத்த (தலைவர்), அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகிய மூவரடங்கிய மேல்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

## வடக்கின்...

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, வடக்கு மாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக அர சாங்கம் முன்னெடுத்துள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் ஆன் மேரி பெலிண்டா ரவேலியனுக்கு ஆளுநர் விளக்கமளித்தார்.

வட மாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் வாழ்வை கட்டியெழுப்புவதற்கும் பூரண ஆதரவை வழங்குவதாக பிரித்தானிய அமைச்சர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பட்ரிக்கும் பங்கேற்றார் என்று வடக்கு மாகாண ஆளுநர் இல்லம் தெரிவித்தது. (ஐ)

## விக்னேஸ்வரன்

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனுப்பிய கடிதங்கள் எவையும் சென்றடையவில்லை என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் எம். பி. தெரிவித்துள்ளார். எனவே, இந் திய பிரதமரை நாங்கள் நேரில் சந்திக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் தங்கள் கருத்து என்ன?" - என்று சுமந்திரனிடம் ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அந்தக் கடிதங்கள் இந்திய பிரதமரிடம் சென்றடைந்துள்ளன. விக்னேஸ்வரன் வெகுவிரைவில் மருத்துவர் ஒருவரைச் சந்திக்க வேண்டும் என்றுதான் நான் நினைக்கின்றேன்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எங்களை சந்தித்தபோது இந்த விடயங்கள் (கடிதங்கள்) பிரதம மந்திரியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்று தெளிவாகவே சொல்லியிருந்தார். அதற்கு முன்னர் கடிதங்களை எடுத்துச் சென்ற இந்திய உயர்ஸ்தானிகர், அந்தக் கடிதங்களை இந்தியப் பிரதமரிடம் கையளித்தவுடனேயே புதுடில்லியிருந்து எனக்குத் தொலை பேசி அழைப்பு எடுத்து கடிதங்களைப் பிரதமரிடம் கையளித்துவிட்டேன் என்று அறிவித்திருந்தார். எனவே, எல்லா கடிதங்களுடம் இந்தியப் பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே ஆகியோர் அதனை எம்மிடம் உறுதிப்படுத்தியுள்ளார்கள். ஆகவே, அவர்கள் அது தொடர்பில் எங்களுக்குப் பொய் சொல்ல வேண்டிய தேவையும் இல்லை பொய் சொல்லியிருப்பார்கள் என்று நான் நினைக்கவும் இல்லை. விக்னேஸ்வரனுக்கு மறதி வியாதி ஏற்பட்டிருக்கலாம். அது வேறு பிரச்சினை.

இந்திய பிரதமரை சந்திப்பது தொடர்பில் விக்னேஸ்வரன் மின்னஞ்சலில் (இப்போது) அனுப்பிய கடிதம் எனக்கு கிடைக்கவில்லை. நான் கட்சித் தலைவர் இல்லைதானே. கட்சித் தலைவர்களுக்குத்தான் அவர் கடிதம் அனுப்பியுள்ளார் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முக்கியமான விடயங்கள் தொடர்பில் என்னுடன் கலந்துரையாடுவார். ஆனால், விக்னேஸ்வரனின் கடிதத்தை அவர் முக்கியமான விடயமாகக் கருதவில்லையோ தெரியவில்லை, அந்தக் கடிதம் தொடர் பில் என்னுடன் சம்பந்தன் எதுவும் பேசவில்லை. இந்தியாவின் முக்கிய வகிபாகத்தை நன்றாக அறிந்த தலைவர் தான் சம்பந் தன். அதற்கேற்ற மாதிரி அவரின் செயல் பாடுகள் இருக்கும்." - என்றார். (ஐ)

## இந்துசமுத்திர...

நேற்று நடந்த சர்வதேச மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசியா - பசுபிக் என்பது ஒருவகை சித்தரிப்பாகும். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் பசுபிக் வலயத்துக்குள் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக ஐக்கிய அமெரிக்காவின் கேந்திர நிலையம் மற்றும் கலந்துரை யாடல் கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் சீனா உட்பட ஏனைய நாடுகள் ஒன்றிணைந்து ஆசிய - பசுபிக் பொருளாதாரத்தை கட்டமைத்தலே இதன் ஆரம்பமாகும். அது பொருளாதார எழுச்சி என்பதை ஏற்றுக்கொள்ள வேண் டும்.

ஒரே தடம் - ஒரே பாதை என்றால் என்ன? அதனை பாதுகாப்பு எழுச்சியென சிலர் கூறினாலும், ஐரோப்பா மற்றும் ஆபிரிக்காவுக்கு இடையில் காணப்படும் வரலாற்று வர்த்தக தொடர் பின் ஊடாக எழுச்சி பெரும் சீனாவை மையப்படுத்திய வர்த்தக வேலைத்திட்டம் என்பதே எமது நிலைப்பாடாகும். அதே போல் இந்து, பசுபிக் என்பது பிற் காலத்தில் ஏற்பட்ட பாதுகாப்பு எழுச்சியாகும்.

இருப்பினும் இந்து சமுத்திரம் என்பது ஒரு எழுச்சி அல்ல. அது நாகரிகமாகும். எழுச்சிகள் ஏற்படலாம், மறைந்தும் போகலாம். ஒரு காலத்தில் சோவியத் ஒன்றியம் இருந்ததை போல ஐரோப்பாவின் எழுச்சிக்கான மேற்கத்திய குழுக்களும் இருந்தன. தற்போது அவை அனைத்தும் மாயமாகிவிட்டன.

தற்போது ஐரோப்பிய சங்கம் இருந்தாலும் உக்ரைன் யுத்தம் நிலவுகிறது. இவ்வாறான எழுச்சிகள் குறிப்பிட்ட ஒரு காலத்தில் மறைந்து போகும். அவர்களின் எழுச்சிகள் பாதுகாப்பு மற்றும் பொருளாதார அறிவியலின் மீது தங்கியுள்ளது.

ஆனால், இந்து சமுத்திரம் ஒரு நாகரிகமாகும். உலக நாகரிகம் இங்கிருந்தே தோற்றம் பெற்றது. மொகான்தாஸ்கே முதல் பாராவா வினர் வரையிலான அனைத்தும் எமது வசமாகவிருக்கும் நாகரிகத்தின் ஒரு பகுதியாகும். இந்த நாகரிகம்தான் உலகின் சிறந்த ஆகமங்களையும் தோற்றுவித்துள்ளது.

இந்து சமுத்திரம் என்பது ஆசிய - பசுபிக், இந்து - பசுபிக், மற்றும் ஒரே தடம் - ஒரே பாதை என்று எவருக்கும் சொந்தமில்லாத அரசியல் அமைப்பாகும். பல நாகரிகங்கள் இங்கிருந்தே தோற்றம் பெற்றுள்ளன. பிரித்தானிய மற்றும் மேற்கத்திய ஆதிக்கம் என்பன இந்து சமுத்திரத்திலேயே சரிவடைந்தன.

கொழும்பு மாநாடு, கொழும்பு பல வான்களின் மாநாடு, பெண்டுன் மாநாடு, ஆபிரிக்க - ஆசியவாதம் என்பனவும் இங்கிருந்தே ஆரம்பித்தன. அணிசேரா நாடுகளின் மாநாடும் இங்கிருந்தே ஆரம்பமாகியது. அதனால் நாம் அடிப்படையில் ஓர் அரசியல் அமைப்பாவோம்.

காலனித்துவம் சரிவடைந்த பின்னர் ஐரோப்பா தவிர்ந்த தரப்புகளையும் நாமே ஏற்றுக்கொண்டோம். நாம் அனைவரும் ஏற்றுக்கொண்ட இந்து சமுத்திர வலயத்தின் அமைதிக்கான யோசனை எம்மிடத்தில் உள்ளது.

இவ்வாறு இந்து சமுத்திரம் தொடர்பில் பல்வேறு விளக்கங்கள் இருப்பதால், நாம் அரசியல் ரீதியாக ஆசிய - பசுபிக் அல்லது ஏனைய அமைப்புகளிலிருந்து வேறுபட்டவர்கள். நாம் அரசியல் மயமானவர்கள் என்ற வகையில் அரசியல் ரீதியில் சிந்திக்கிறோம்.

வர்த்தகத்திலும் எமக்கான தனித்துவங்கள் உள்ளன. இந்து சமுத்திரத்தில் இலங்கை மூலோபாய அமைவிடத்தை கொண்டுள்ளது. கொழும்பு துறைமுகத்தை அபிவிருத்தி செய்தால் வலயத்தின் மிகப்பெரிய விநியோக மத்தியஸ்தானமாக உருவெடுக்கும். அதனால் கிழக்கு இந்திய சமுத்திர அபிவிருத்தியின் பிரதிபலன்களை நாமும் அடைந்து கொள்ள முடியும் - என்றார். (ஐ)

## தேர்தலுக்காக...

சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

பெண் பிரநிதித்துவத்தை அதிகரிப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாண சபைத் தேர்தல் முறைமையை திருத்தம் செய்தார். இறுதியில் மாகாண சபை தேர்தல் கால வரையறையின்றி பிற்போடப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர் எண்ணிக்கையை வரையறை செய்வதாகக் குறிப்பிட்டுக் கொண்டு எல்லை நிர்ணயம் புதிதாக வகுக்கப்பட்டது. தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் ஆகியவற்றை பிற்போடுவது கடினமானதல்ல - என்றார்.

## நாட்டில் ...

என்பதை விளக் கும் என்று கூறிய அவர், அந்த விசேட அறிக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடம் வழங்கப்படும் என்று தேசிய பாதுகாப்பு பற்றிய மேற்பார்வை குழு வின் தலைவராகவும் பதவி வகிக்கும் வீரசேகர கூறியுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், "ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. நாட்டு மக்கள் அச்சமோ சந்தேகமோ இன்றி வாழக்கூடிய சூழல் இருக்க வேண்டும். மேலும், முதலீட்டு வாய்ப்புகளைப் பெறுவதில் ஒரு நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதி செய்வது மிகவும் முக்கியமாகின்றது.

பௌதிக பாதுகாப்பு மாத்திரமன்றி பொருளாதாரப் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தனிநபர் பாதுகாப்பு ஆகியவையும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. கடந்த 10 ஆண்டுகளில் மாத்திரம் சுமார் 27 ஆயிரம் பேர் வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளனர். முப்பது ஆண்டு காலப் போரில் சுமார் 29 ஆயிரம் பேரே இறந்தனர். தற்போது, நாட்டில் வீதி விபத்துகள் அதிகமாக இடம்பெறுகின்றன." - என்றார். (ஐ)

## நீதிபதி...

என்று எந்த சந்தர்ப்பத்திலும் பொலிஸ், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவில் சரவணராஜா முறையிடவில்லை. 23 ஆம் திகதி இராஜிநாமா கடிதத்தை நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு வழங்கிய அவர் 24ஆம் திகதி வெளிநாடு சென்றுள்ளார்.

நாட்டை விட்டு வெளியேறிய முன்னாள் நீதிபதி தொடர்பில் முல் லைத்தீவு மாவட்ட நீதிபதியின் மனைவி, முல்லைத்தீவு மேலதிக நீதவான், முல்லைத் தீவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்டோரிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வாக்கு மூலங்களில் அவருக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்ப தாகவோ அல்லது அவர் அவ்வாறு கூறினார் என்றோ அவர்கள் கூறவில்லை என்று அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி கடந்த செப். 24 ஆம் திகதி துபாய் சென்றார். இதற்காக அவர் எயார் அரேபியா விமான சேவைக்கான விமான ரிக்கெற்றை குருநாகலிலுள்ள முகவர் ஒருவர் ஊடாக கொள்வனவு செய்துள்ளார். அமெரிக்காவின் தொலைபேசி இலக்கமொன்றின் மூலம் இச்செயல் முன்னெடுக்கப்பட்டது.

அந்த அமெரிக்க தொலைபேசி இலக்கம் செயலிழக்கப்பட்டால், மீண்டும் அழைப்பதற்காக கென்யாவின் தொலைபேசி இலக்கமொன்று ரிக்கெற் விற்பனை முகவரால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், விமான ரிக்கெற்றுக்கான கட்டணம் கல்முனை பிரதேசத்தில் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# கோட்டாவின் தவறான நிர்வாகத்தால் பொதுஜன பெரமுன பலவீனமடைந்தது

## சந்திரசேன குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 13

**கோட்டாபய ராஜபக்ஷவின் தவறான நிர்வாகத்தினால் பொதுஜன பெரமுன தலைமையிலான அர சாங்கமும் கட்சியும் பலவீனமடைந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்முடன் இணக்கமாக செயலபட்டால் முரண்பாடற்ற வகையில் அரச நிர்வாகத்தை முன்னெடுக்கலாம் என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.**

கொழும்பில் உள்ள பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொவிட் பெருந்தொற்று மற்றும் பொருளாதார பாதிப்பு காரணமாக தேசிய தொழிற்துறை மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியை மாத்திரம் பிரதான இலக்காக அரசாங்கம் கொண்டுள்ளதே தவிர தேசிய தொழிற்றுறையை மேம்படுத்த எந்த நடவடிக்கைகளையும் இதுவரை முன்னெடுக்கவில்லை. இதை பிரதான குறைபாடாக கருதுகிறோம்.

நாட்டில் கடந்த வாரம் நிலவிய மழையுடனான கால




நிலையால் 15 இற்கும் அதிமான மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

# 4 பில்லியன் டொலர் கடன் மறுசீரமைப்புக்கு இலங்கை-எக்ஸிம் வங்கி இடையே இணக்கம்

கொழும்பு, ஒக். 13

4.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் மறுசீரமைப்பு தொடர்பான அடிப்படை வேலைத்திட்டத்திற்கு இலங்கையும் சீனாவின் எக்ஸிம் வங்கியும் இணக்கம் தெரிவித்துள்ளன.

நீண்ட கால கடன்களை மீளச் செலுத்துவதற்கான இலங்கையின் உறுதித்தன்மையை ஏற்படுத்துவதற்கும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் இந்த உடன்பாடு உதவியாக இருக்குமென நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கு இணங்க பொதுக்கடன் நிலைத்தன்மையை அடைவதற்கான சீன எக்ஸிம் வங்கியின் பங்களிப்பு மற்றும் தொடர்ச்சியான ஆதரவிற்கு இலங்கை அரசாங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

கடன் பெறுநர்கள், வணிகக் கடன் வழங்குநர் குழுவுடன் சீன எக்ஸிம் வங்கி தொடர்ந்தும் உறவைப் பேணுமென இலங்கை அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைக்கும் சீன எக்ஸிம் வங்கிக்கும் இடையிலான இந்த ஒப்பந்தம் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்படவேண்டியுள்ளது.

அந்த ஒப்புதலின் பின்னர், இரண்டாவது தவணைக் கொடுப்பனவான 334 மில்லியன் அமெரிக்க டொலர் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்குமென நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையும் எக்ஸிம் வங்கியும் அடுத்த சில வாரங்களுக்கு இதற்காக தீவிரமாக செயற்படுமென நிதி அமைச்சின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (அ)

# வெறுப்பை நீக்கி புதிய வாக்காளர்களை வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பவேண்டும்

## வஜிர அபேவர்தன ஆலோசனை

கொழும்பு, ஒக். 13

வாக்காளர்களின் உள்ளத்தில் உள்ள வெறுப்பை நீக்கியே வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அவர்களை அனுப்ப வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

வெறுப்பு, கோபம், பொறாமை இல்லாத வாக்காளர் ஒருவர் வாக்குச் சாவடிக்குச் செல்லும் போது ஒரு நல்ல நாட்டை உருவாக்க முடியும் என வஜிர அபேவர்தன கூறினார்.

காலியில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே வஜிர அபேவர்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதில் இருந்து இன்று வரை 75 வருடங்களாக இலங்கை தவறான தேசமாக இருந்ததாகவும், அந்தத் தவறு தற்போது உச்சத்தை எட்டியதாகவும் அவர் கூறினார்.




இந்த தவறை தற்போது திருத்திக் கொள்ள வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு தொடர்ந்தும் தெரிவித்து வருவதாக வஜிர அபேவர்தன குறிப்பிட்டார். (அ)

# பமுனுகம கடற்கரையில் மனித தலையால் பரபரப்பு!

கொழும்பு, ஒக். 13

பழைய அம்பலம கடற்கரையில் துண்டிக்கப்பட்ட நிலையில் மனிதத் தலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

நேற்று காலை பமுனுகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே குறித்த மனிதத் தலை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, குறித் தலையானது அடையாளம் காண முடியாத அளவுக்கு சிதைவடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# கொழும்பில் உதயமாகியுள்ளது தமிழர் கல்வி மேம்பாட்டு கழகம்



கொழும்பு, ஒக். 13

தமிழ் சமுதாயத்தின் கல்வி அறிவை மேம்படுத்தும் வகையில் தமிழர் கல்வி மேம்பாட்டு கழகம் எனும் அமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனினால் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வின்போது தமிழர் கல்வி மேம்பாட்டு கழகத்தின் போசகராக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனும், தலைவராக ப. பரமேஸ்வரனும், செயலாளராக திருமதி. கே. நிரஞ்சன், நிதிச் செயலாளராக எம். ஜெயப்பிரகாஷ் நியமிக்கப்பட்டனர்.

அத்துடன் ஏனைய பதவிகளுக்கான நியமனங்கள் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரியர் டி. தனராஜ், தொழிட்நுட்ப அமைச்சுப் பணிப்பாளர் எஸ். பரமேஸ்வரன் மற்றும் கல்வியமைச்சின் முன்னாள் செயற்திட்ட அதிகாரி க. பத்மநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மூவாயிரம் விவசாயிகளுக்கு உரம் வழங்க நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 13

பெரும்போகத்தில், மரக்கறி மற்றும் ஏனைய பயிர்ச் செய்கையில் ஈடுபடும் 3 மாவட்டங்களைச் சேர்ந்த மூவாயிரம் விவசாயிகளுக்கு உரத்தை வழங்க விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, விவசாயி ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உரத்தை வழங்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டம் மாத்தளை, குருநாகல், மொனராகலை ஆகிய மாவட்டங்களில் அமுல்படுத்தப்படவுள்ளது.

ஒரு ஹெக்ரேயருக்கு குறைவான நிலத்தில் காய்கறிகள் மற்றும் பிற பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கே இவ்வாறு உரம் வழங்கப்படுவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார். (அ)

# அனைத்து பல்கலைக்கழகங்களிடமும் அறிக்கை கோருகிறது உயர் நீதிமன்றம்

கொழும்பு, ஒக். 13

கடந்த 3 வருடங்களில் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு மாணவர்களால் துன்புறுத்தப்பட்ட போது, ஏற்பட்ட சேதத்திற்கு நட்டஈடு கோரி சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்த போதே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதன்படி புவனேக அலுவிஹாரே, ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் கொழும்பு, களனி மற்றும் சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றில் தமது சாட்சியங்களை முன்வைத்ததுடன், குறித்த விடயம் தொடர்பான அறிக்கைகளை தாக்கல் செய்வதற்கு கால அவகாசம் வழங்குமாறும் கோரியிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ரோகித் அதிரடி சதம்; இந்தியா இலகு வெற்றி!



புதுடில்லி, ஒக். 13

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது. இப்போட்டியில் இந்திய அணித் தலைவர் ரோகித் சர்மா சாதனை சதம் விளாசினார்.

273 ஓட்டங்கள் இலக்கை துரத்திய இந்திய அணிக்கு ரோகித் சர்மா - இஷான் கிஷன் இணை சிறப்பான தொடக்கம் கொடுத்தது. இஷான் நிதானத்தை கடைபிடிக்க ரோகித் ஆப்கான் பந்துவீச்சாளர்களை பதம் பார்த்தார். தொடக்கம் முதலே அதிரடியை கையாண்ட அவர் 30 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். தொடர்ந்து அதிரடியை கைவிடாத ரோகித் 63 பந்துகளில் சதம் பதிவு செய்தார். ரோகித்தின் கிரிக்கெட் வாழ்வில் சாதனை சதமாக இது அமைந்தது.

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் ரோகித்தின் 31ஆவது சதம் இது. இதன்மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிக சதம் எடுத்தவர்கள் பட்டியலில் றிக்கி பொண்டிங்கை முந்தி தற்போது 3ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

ரோகித் ஒருபுறம் அதிரடியாக விளையாட, மறுபுறம் நிதானமாக விளையாடிய இஷான் கிஷன் 47 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் ரோகித் - இஷான் கூட்டணி முதல் விக்கெட்டுக்கு 156 ஓட்டங்களை இணைப்பாட்டம் மூலம் சேர்த்தது. இதன்பின் கோலி - ரோகித் கூட்டணி சிறப்பாக விளையாடியது. எனினும், 84 பந்துகளில் 131 ஓட்டங்கள் எடுத்திருந்த ரோகித், ரஷீத் கான் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

பின்னர் விராட் கோலி மற்றும் ஸ்ரேயாஸ் ஐயர் இணைந்து இந்திய அணியை வெற்றி பாதைக்கு அழைத்து சென்றனர். ஆப்கான் பந்துவீச்சை எளிதாக சமாளித்த இவர்களால் 90 பந்துகள் மீதமிருக்கையில் இந்திய அணி இலக்கை விரட்டி வெற்றிபெற்றது. விராட் கோலி 55 ஓட்டங்களும் ஸ்ரேயாஸ் ஐயர் 25 ஓட்டங்களும் எடுத்து இறுதிவரை ஆட்மிழக்காமல் இருந்தனர். நடப்பு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்திய அணி பெறும் இரண்டாவது வெற்றி இதுவாகும். ஆப்கான் தரப்பில் ரஷீத் கான் இரண்டு விக்கெட்டை வீழ்த்தினார்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி, நான்கு பௌண்ட்ரிகளுடன் சிறப்பாக தொடக்கம் கொடுத்த ஆப்கான் வீரர் இப்ராஹிம் சத்ரானை 22 ஓட்டங்களில் பும்ரா விக்கெட்டை இழந்தார். சில நிமிடங்களில் ரஹ்மானுல்லா குர்பாஸை 21 ஓட்டங்களில் ஹார்திக் பாண்ட்யா வீழ்த்தினார்.

ரஹ்மத் ஷாவை ஷர்துல் தாகூர் ஆட்டமிழந்தார். பின் இணைந்த ஆப்கான் அணித் தலைவர் ஹஷ்மத்துல்லா ஷாஹிதியும், அஸ்மத்துல்லா உமர்சாயும் சிறப்பான இணைப்பாட்டத்தை உருவாக்கினர். 100 ஓட்டங்களுக்கு மேல் சேர்த்த இந்தக் கூட்டணியை பிரிக்க இந்திய பந்துவீச்சாளர்கள் கடுமையாக முயற்சித்தனர். இறுதியில், அரைச்சதம் கடந்து 62 ஓட்டங்கள் எடுத்திருந்த அஸ்மத்துல்லா உமர்சாயை ஹர்திக் பாண்டியா ஆட்டமிழக்க செய்தார். இதன்பின்னும் சிறப்பாக விளையாடிய ஷ ாஹிதி 80 ஓட்டங்களில் குல்தீப் யாதவ் பந்துவீச்சில் விக்கெட்டை இழந்தார்.

இதன்பின் வந்தவர்களை பும்ரா தனது வேகத்தால் வரிசையாக வீழ்த்தினார். இறுதியில் 50 ஓவர்கள் முடிவில் ஆப்கான் அணி 8 விக்கெட் இழப்புக்கு 272 ஓட்டங்கள் சேர்த்தது. இந்திய அணி தரப்பில் பும்ரா 4 விக்கெட், ஹார்திக் பாண்ட்யா 2 விக்கெட் குல்தீப் மற்றும் ஷர்துல் தலா ஒரு விக்கெட் எடுத்திருந்தனர்.

(ஐ)




# ரோகித் சர்மா இரு சாதனைகள்!

புதுடில்லி, ஒக். 13

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ரோகித் சர்மா இரு உலக சாதனைகளை படைத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில் ஆப்கானிஸ் தான் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப் புக்கு 272 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு ஆடிய இந்திய அணிக்கு தொடக்க வீரர்க ளாக அணித் தலைவர் ரோகித் சர்மா மற்றும் இஷான் கிஷன் களமிறங்கினர். தொடக்கம் முதல் ரோகித் அதிரடியாக ஆடினார்.

ரோகித் சர்மா பந்துகளை பௌண்ட்ரி, சிக்ஸருக்கு பறக்க விட்டார். தொடர்ந்து அதிரடி காட்டிய அவர் அரைச்சதம் அடித்தார். அதன் பின்னர் ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சை துவம்சம் செய்த ரோகித் சர்மா 63 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார். இதன்மூலம் உலகக் கிண்ணத்தில் குறைந்த பந்துகளில் சதம் அடித்த இந்திய வீரர் ஆனார். பின்னர் ரோகித் சர்மா 84 பந்து களில் 131 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்

மேலும், இந்த போட்டியில் ரோகித் சர்மா 5 சிக்ஸர் கள் அடித்ததன் மூலம் சர்வதேச அளவில் 3 வகை கிரிக் கெட்டிலும் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர் என்ற சாதனை நிகழ்த்தியுள்ளார். இவருக்கு அடுத்தபடியாக கிறிஸ் கெய்ல் 2ஆவது இடத்தில் உள்ளார்.

சர்வதேச போட்டியில் அதிக சிக்ஸர்கள் அடித்த ரோகித் சர்மா - ( 556 சிக்ஸர்கள்) முதல் இடத்திலும் , கிறிஸ் கெய்ல் (553 சிக்ஸர்கள்) 2ஆவது இடத்திலும் , அப்ரிடி (476 சிக்ஸர்கள் ) 3ஆவது இடத்திலும் உள்ள னர்.

(ஐ)



# நியூசிலாந்து - வங்கம் இன்று பலப்பரீட்சை!

புதுடில்லி, ஒக். 13

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இன்று நடக்கும் போட்டியில் நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன. இந்தப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகிறது.

நியூசிலாந்து, தான் மோதிய 2 போட்டிகளிலும் வெற்றி பெற்றது. இங்கிலாந்து, நெதர்லாந்து அணிகளை வீழ்த்தியது. நியூசிலாந்து ஹட்ரிக் வெற்றி பெறும் முனைப்பில் உள்ளது. அந்த அணியில் கொன்வே, ரவீந்திரா, வில்யங், மிட்செல் ஆகியோர் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர். பந்து வீச்சில் போல்ட், ஹென்றி, சான்ட்னர் ஆகியோர் உள்ளனர். அந்த அணி துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் சமபலத்துடன் உள்ளது.

பங்களாதேஷ் தனது முதல் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தானை தோற்கடித்தது. 2ஆவது போட்டியில் இங்கிலாந்திடம் தோற்றது. பங்களாதேஷ் அணி 2ஆவது வெற்றியை பெறும் ஆர்வத்தில் உள்ளது. ஆனால், பலம் வாய்ந்த நியூசிலாந்துக்கு எதிராக கடுமையாக போராட வேண்டியதிருக்கும்.

அந்த அணியில் அணித் தலைவர் ஷகிப்-அல்-ஹசன், லிட்டன் தாஸ், நஜ்முல் ஹூசன் சாண்டோ, முஷ்பிகுர் ரகுமான், மெகதி ஹசன் மிராஸ், தஸ்கின் அகமது, ஷெ ாரிபுல் இஸ்லாம் ஆகிய வீரர்கள் உள்ளனர். (ஐ)

# முடிவுக்கு வந்தது கோலி - நவீன் பகை

புதுடில்லி, ஒக். 13

நடப்பு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 9ஆவது போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியை 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி உள்ளது இந்திய அணி.




இந்தப் போட்டியில் இந்திய வீரர் விராட் கோலி மற்றும் ஆப்கானிஸ்தான் வீரர் நவீன் உல் ஹக் இடை யிலான பகை முடிவுக்கு வந்துள்ளது. களத்தில் இரு வரும் பரஸ்பரம் கை கொடுத்து நட்பு பாராட் டியதோடு, அணைத்துக் கொண்டனர்.

முன்னதாக, கடந்த ஐ. பி. எல். தொடரின்போது லக்னோ அணிக்காக விளையாடிய நவீன் உல் ஹக் மற்றும் பெங்களூர் அணிக்காக விளையாடிய கோலியும் களத்தில் வார்த்தை போரில் ஈடுபட்டனர். அந்தப் போட்டி முடிந்ததும் லக்னோ அணியின் ஆலோசகர் கௌதம் கம்பீர் மற்றும் கோலி இடையில் மோதல் வெடித்தது.

அதன் பிறகு விராட் கோலி ஆட்டத்தில் தடுமாறும் போதும், பெங்களூர் அணி தோல்வியை தழுவும் போதும் மாம்பழங்களை சமூக வலைதள பக்கங்களில் பகிர்ந்து ‘இன்பமாக இருக்கு...’ என சொல்வது போல பதிவிட்டு வந் தார் நவீன் உல் ஹக். அதே நேரத் தில் அந்தத் தொடர் முழுவதும் அவர் களத்தில் களத்தடுப்பில் செய் யும் போது ‘கோலி.. கோலி..’ என ரசிகர்கள் முழக்கமிட்டு வந்தனர்.

இந்த சூழலில் நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ் தான் மற்றும் இந்தியா இடையி லான போட்டியில் நவீன் உல் ஹக் துடுப்பெடுத்தாட வந்தபோது ‘கோலி.. கோலி..’ என ரசிகர்கள் முழக்கமிட்டனர். பின்னர் கோலி துடுப்பெடுத்தாடியபோது அவருக்கு நவீன் உல் ஹக் பந்து வீசி இருந்தார். அப்போது இருவரும் ஒருவருக்கு ஒருவர் கை கொடுத்துக் கொண்டனர். அதோடு இருவரும் அணைத்துக்கொண்டனர்.

“போதும் இதோடு இதை முடித்துக் கொள்ளலாம் என இருவரும் சொல்லிக் கொண் டோம்” என ஆட்டத்துக்கு பிறகு நவீன் உல் ஹக் தெரிவித்தார். நடப்பு உலகக் கிண்ணத் தொட ருக்கு பிறகு ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து நவீன் உல் ஹக் ஓய்வு பெற உள்ளார் என்பது குறிப்பிடத்தக் கது.

(ஐ)

ஈழநாடு



# சீன பொருளாதாரம் ஏன் தடுமாறுகிறது?

முகம்மது ரியாஸ்

1991 - 2001 வரையிலான பத்தாண்டு காலகட்டத்தில் ஜப்பான் மிக மோசமான பொருளாதார மந்தநிலையை எதிர்கொண்டது. இந்தக் காலகட்டத்தை 'இழந்த சகாப்தம்' என்று அழைக்கிறார்கள். ஏனென்றால், அதற்கு முந்தைய பத்து ஆண்டுகளில், அமெரிக்கா உட்பட ஏனைய வளர்ந்த நாடுகள் பொறாமை கொள்ளும் அளவுக்கு ஜப்பானின் பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தது. ஜப்பானின் இந்த வளர்ச்சிக்கு அதன் ரியல் எஸ்டேட் துறை மிக முக்கிய காரணமாக இருந்தது.

நிலப்பரப்பில் ஜப்பானைவிட அமெரிக்கா 25 மடங்கு பெரிய நாடு. ஆனால், 1980-களில் ஜப்பானின் மொத்த நில மதிப்பானது அமெரிக்காவின் மொத்த நில மதிப்பைவிட 4 மடங்கு அதிகமாக இருந்தது. ரியல் எஸ்டேட் உச்சத்தில் இருந்ததால், ஜப்பான் வங்கிகள் கடனை வாரி இறைத்திருந்தன.

1980-களில் இறுதியில் ரியல் எஸ்டேட் துறை திடீர் தேக்கம் காணத் தொடங்கியது. ரியல் எஸ்டேட் துறை தேக்கத்தால், அதில் முதலீடு செய்த நிறுவனங்களும் மக்களும் இழப்பைச் சந்தித்தனர். ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கு கடனை வாரி இறைத்த வங்கிகள் திவாலாகின. ஜப்பானின் இருண்ட காலம் தொடங்கியது.

1989 முதல் 1992 வரையிலான மூன்றே ஆண்டுகளில் ஜப்பானில் பங்குச் சந்தை 60 சதவீதம் வீழ்ச்சி அடைந்தது. ரியல் எஸ்டேட் மதிப்பு அடுத்த பத்து ஆண்டுகளில் 70 சதவீதம் அளவில் சரிந்தது.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்த நிலையில் மக்கள் பணத்தை செலவு செய்யாமல் சேமித்து வைக்க ஆரம்பித்தனர். மக்களிடம் நுகர்வை தூண்டும் நோக்கில் ஜப்பான் அரசு அதன் வட்டி விகிதத்தை பூஜ்யம் வரையில் குறைத்தது. அதாவது வங்கியில் கடன் பெற்றால், அதற்கு வட்டி செலுத்தத் தேவையில்லை.

எனினும், மக்கள் வங்கியில் கடன் வாங்க முன்வரவில்லை. மக்களின் நுகர்வு குறைந்ததால் விலைவாசி வீழ்ந்தது. தொழிற் செயல்பாடுகள் முடங்கின. விளைவாக, நிறுவனங்கள் ஊழியர்களை பெரும் எண்ணிக்கையில் வேலைநீக்கம் செய்தன. இந்தப் பொருளாதார மந்த நிலை பத்து ஆண்டுகளுக்குத் தொடர்ந்தது.

ஒரு நாட்டின் ரியல் எஸ்டேட் துறை பெரும் உச்சத்துக்குச் சென்று, வீழ்ச்சி அடையும்போது ஜப்பானின் இந்த வரலாற்றை நினைவுகூர்வது வழக்கம். தற்போது சீனாவை மையப்படுத்தி ஜப்பானின் இந்த வரலாறு நினைவுகூரப்படுகிறது.

### தடுமாற்றத்தில் சீனா

கடந்த 20 ஆண்டுகளில் சீனா பொருளாதார ரீதியாக மிகப் பெரும் வளர்ச்சியை எட்டி, அமெரிக்காவுக்கு நிகரான நாடாக தன்னை நிலை நிறுத்திக்கொண்டுள்ளது. ஆனால், தற்போது சீனாவின் சாம்ராஜ்யத்துக்கு பெரும் சவால் வந்துள்ளது, ரியல் எஸ்டேட் துறை வழியாக.

சீனாவின் மொத்த ஜிடிபியில் ரியல் எஸ்டேட் துறை 30 சதவீதம் பங்கு வகிக்கிறது. அத்துறையில் சீனா மிகப் பெரிய அளவில் முதலீடு செய்துள்ளது. தற்போது அத்துறை பெரும் தேக்க நிலைக்கு உள்ளாகி இருக்கிறது.

பொதுவாக ஒரு நாட்டில் ரியல் எஸ்டேட் துறை பெரும் தேக்கத்தைச் சந்திக்கும்போது, அடுத்த பாதிப்பு அந்நாட்டின் வங்கித் துறையில் நிகழும். ஏனென்றால், ரியல் எஸ்டேட் துறை வளர்ந்து வரும் சமயத்தில் அந்நாட்டு வங்கிகள் அத்துறைக்கு கடன்களை வாரி இறைத்திருக்கும்.

அத்துறை தேக்கத்தைச் சந்திக்கும்போது கடன்கள் திரும்பி வருவது நெருக்கடிக்கு உள்ளாகும். 2008-ம் ஆண்டு அமெரிக்காவில் லேமன் பிரதர்ஸ் வங்கி திவாலானதற்கு இது அடிப்படை காரணமாக இருந்தது. அதேபோல், தற்போது சீனாவில் ரியல் எஸ்டேட் துறையின் தேக்கத்தால் வங்கிகள் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றன.

### மூன்று பிரச்சினைகள்

2020 மார்ச் மாதம் கொரோனா பரவல் தீவிரமடைந்த நிலையில் உலக நாடுகள் ஊரடங்கைக் கொண்டு வந்தன. தொற்று பரவல் குறையத் தொடங்கியதையடுத்து பெரும்பாலான நாடுகள் ஊரடங்கை தளர்த்தின. ஆனால், சீனா ஊரடங்குக் கட்டுப்பாட்டை இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக நீட்டித்தது. இதனால், அங்கு தொழிற் செயல்பாடுகள் முடங்கிய நிலையில், நாட்டின் பொருளாதாரம் தடுமாற்றத்தை சந்திக்கத் தொடங்கியது.



கொரோனாவுக்குப் பிறகு சீனாவில் மூன்று முக்கிய பிரச்சினைகள் தீவிரமடைந்தன. முதலாவது. ரியல் எஸ்டேட் துறையின் தேக்கம். இரண்டாவது உள்ளூர் அரசு நிர்வாகங்களின் கடன் சுமை வரலாறு காணாத அளவில் அதிகரிப்பு. மூன்றாவது, மக்களின் நுகர்வு சரிவு. சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இந்த மூன்று பிரச்சினைகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.

சீன சட்டப்படி, நில உரிமை சீன அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும். தனியாருக்கு நிலத்தின் மீது உரிமை கிடையாது. அரசிடமிருந்து அவை நிலத்தை குத்தகைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். சீன அரசுக்கான வருவாயில் நில குத்தகை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இதனால், சீனா அந்நாட்டில் ரியல் எஸ்டேட் நிறுவனங்களை ஊக்குவித்தது. சீன வங்கிகள் ரியல் எஸ்டேட் துறைக்கு கடன்களை வாரி இறைத்தன.

மக்கள் கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கி அதிக எண்ணிக்கையில் குடியேறுவார்கள் என்ற கணிப்பில் ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் காணும் இடமெங்கிலும் அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டியெழுப்பின. ஆனால், எதிர்பார்த்த அளவில் அங்கு குடியேற்றம் நிகழவில்லை. 2022 நிலவரப்படி சீனாவில் 2.5 கோடி அடுக்குமாடி குடியிருப்புகள் காலியாக இருக்கின்றன. இது ஒட்டுமொத்த பிரிட்டன் மக்கள் குடியேறுவதற்கு போதுமானதாகும்.

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த சீன அரசு, இனியும் ரியல் எஸ்டேட் துறைக்கு வரைமுறையில்லாமல் கடன் வழங்கினால் அது பெரும் சிக்கலில் முடிந்துவிடும் என்ற நிலையில், 2020-ம் ஆண்டு கடன் வழங்கலில் புதிய கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தது.

இந்தக் கட்டுப்பாடுகள் காரணமாக பெரிய நிறுவனங்கள் எதிர்கொண்டுவந்த கடன்நெருக்கடி வெளிச்சத்துக்கு வர ஆரம்பித்தது. சீனாவின் மிகப் பெரிய ரியல் எஸ்டேட் நிறுவனமான எவர்கிராண்ட் தீவிர நிதி நெருக்கடியில் இருப்பது 2021-ம் ஆண்டு வெளிச்சத்துக்கு வந்தது. தற்போது கன்ட்ரி கார்டன் என்ற மற்றொரு பெரிய ரியல் எஸ்டேட் நிறுவனம் கடன் நெருக்கடியை எதிர்கொண்டிருப்பது தெரியவந்துள்ளது.

ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கு கடன் வழங்கிய நூற்றுக்கணக்கான சீன வங்கிகள் நெருக்கடியில் இருப்பதாகக் கூறப்படுகிறது. தவிர, ரியல் எஸ்டேட் துறையின் சரிவால் உள்ளூர் நிர்வாகங்களுக்கான வருவாய் குறைந்துள்ளது. இதனால் அவற்றின் கடன் சுமை இதுவரையில் இல்லாத அளவில் அதிகரித்துள்ளது.

ரியல் எஸ்டேட் துறையின் சரிவு மக்களின் நுகர்வையும் பாதித்துள்ளது. சீன மக்களின் சேமிப்பில் 60 சதவீதம் ரியல் எஸ்டேட் துறையில் சொத்துகளாக உள்ளன. அத்துறை தேக்கம் கண்டுள்ள நிலையில் மக்களின் சொத்து மதிப்பும் சரிந்துள்ளது. இதனால், மக்கள் பணத்தை செலவழிக்க தயக்கம் காட்டி வருகின்றனர்.

மக்களின் நுகர்வு குறைந்துள்ளதால், நிறுவனங்கள் உற்பத்தி செய்த பொருள்கள் தேங்கியுள்ளன. இதனால், விலைவாசி சரிந்துள்ளது. தொழிற் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதால், வேலையின்மையும் தீவிரமடைந்துள்ளது.

அமெரிக்கா, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் தற்போது 'பணவீக்கம்' தீவிரமாக காணப்பட்டு வருகிறது. ஆனால், சீனாவில் 'பணவாட்டம்' காணப்படுகிறது. விலைவாசி உயர்ந்தால் அது பணவீக்கம். விலைவாசி சரிந்தால் அது பணவாட்டம். விலைவாசி உயர்வைப் போலவே விலைவாசி சரிவும் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடியது.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மக்களின் நுகர்வு முக்கிய பங்கு வகிக்கிறது. அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் அந்நாட்டின் ஜிடிபியில் மக்களின் நுகர்வு 70 சதவீதமாக இருக்கிறது. அதுவே சீனாவில் மக்களின் நுகர்வு 38 சதவீதமாக இருக்கிறது. முதலீடு 50 சதவீதமாக இருக்கிறது. முதலீடுக்கு ஏற்ப நுகர்வு நிகழ வேண்டும். இல்லையென்றால், பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்பு ஏற்படும்.

கடந்த இருபது ஆண்டுகளில் சீனா கடன் திட்டங்கள் மூலம் முதலீட்டை மட்டுமே ஊக்குவித்து வந்துள்ளது. மக்களின் நுகர்வை அதிகரிப்பதில் கவனம் செலுத்தவில்லை. இதனால், முதலீடுக்கு ஏற்ப நுகர்வு நிகழவில்லை. தவிர, மக்களின் தனிநபர் வருமானமும் மேம்படவில்லை.

ஆப்பிள், டெஸ்லா உட்பட உலகின் முன்னணி நிறுவனங்கள் தங்களது விநியோக தளத்தை சீனாவில் கொண்டுள்ளன. தற்போது சீனா பொருளாதார தடுமாற்றத்தை எதிர்கொண்டுள்ள நிலையில், சீனா தவிர்த்து இந்தியா உட்பட வேறு நாடுகளில் தங்களுக்கான விநியோக தளத்தை அமைக்கும் முயற்சியில் நிறுவனங்கள் இறங்கியுள்ளன. இது சீனாவுக்கு கூடுதல் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் மக்கள் தொகையும் குறையத் தொடங்கி இருக்கிறது. குறிப்பாக வேலைவாய்ப்பில் பங்கேற்கக்கூடிய 15 - 64 வயதுக்குட்பட்டவர்களின் எண்ணிக்கை குறைகிறது. வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இது சீனாவின் வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக நாடுகளுடன் நேரடி வர்த்தகத்தை சாத்தியப்படுத்தும் வகையில் மாபெரும் உள்கட்டமைப்பு திட்டத்தை சீனா மேற்கொண்டு வருகிறது. இதற்காக ஆப்ரிக்கா, இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட நிதி நெருக்கடியில் இருக்கும் நாடுகளுக்கு பெரும் தொகையை கடனாக வழங்கியுள்ளது. தற்போது அந்நாடுகளில் நிதி நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் அந்தக் கடன் திரும்பி வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

### உற்றுநோக்கும் உலகம்

மூன்றாவது முறையாக அதிபராக பொறுப்பேற்றுள்ள ஜி ஜின்பிங் சீனாவை அரசியல் தளத்திலும் பொருளாதார தளத்திலும் உலகின் மையமாக தன்னை மாற்ற திட்டங்கள் வகுத்து வருகிறார். ஆனால், களச் சூழல் மிக மோசமாகிக் கொண்டிருக்கிறது.

தற்போதைய சரிவிலிருந்து சீனா எப்படி மீளப்போகிறது என்பதையும் அதன் முன் இருக்கும் சவால்களை எப்படி எதிர்கொள்ளப்போகிறது என்பதையும் உலகம் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது!

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு வைபவம்!





















கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு வைபவம் 11.10. 2023 புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 10:45 மணி வரை கலாசாலையில் அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சர் டாக்டர் சுசில் பிரேமஜெயந்த அவர்களும் சிறப்பு விருந்தினராக கடல் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் கௌரவ விருந்தினராக கல்வி அமைச்சின் செயலாளர் எம் என் ரணசிங்க அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

கலாசாலையின் வாயிலில் இருந்து ஆறுமுகநாவலர், அருணாசல உபாத்தியாயர், சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம் உள்ளிட்ட பெரியார்களைப் போல வேடமணிந்த மழலைகள் விருந்தினர்களை அழைத்து வந்தனர்.

நீர்வேலி கரந்தன் இராமு பிள்ளை வித்தியாலயத்தை சேர்ந்த இருபதிற்கும் மேற்பட்ட பிள்ளைகள் வேடம் தாங்கி இருந்தனர்.

கலாசாலையின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்ட பெரியவர்கள் வானத்தில் இருந்து இறங்கி வந்து ஆசி தருவதை பிரதிபலிப்பதாக இந்த கோலப்புனைவு அமைந்திருந்தது.

கலாசாலையின் யோக லிங்கேஸ்வரர் ஆலயத்தில் இருந்து வரவேற்பு ஊர்வலம் ஆரம்பமாகியது.

தொடர்ந்து தேசிய கொடியேற்றலுடன் வரவேற்பு ஊர்வலம் மண்டபத்தை சென்றடைந்தது.

அங்கு வரவேற்பு நடனம் விரிவுரையாளர் செல்வி ரஜிதா சின்னதுரையின் நெறியாள்கையில் இடம்பெற்றது.

தொடர்ந்து பிரதி அதிபர் க. செந்தில்குமரன் வரவேற்புரையை ஆற்றினார். தொடர்ந்து கலாசாலையின் நூற்றாண்டு மலர் வெளியீடு இடம் பெற்றது. இதன் வெளியீட்டு உரையினை கலைமலர் ஆசிரியர் விரிவுரையாளர் கு. பால சண்முகன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கலைமலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன் பிரதிகளை அதிபர் அமைச்சர்கள் இருவருக்கும் கையளித்தார்.

அதனை அடுத்து கல்வி அமைச்சர் முதல் பிரதியை வெளியிட்டு வைத்தார். அதனை கலாசாலையின் பழைய மாணவியும் நீர்வேலி கரந்தன் இராமுபிள்ளை வித்தியாலய அதிபருமாகிய திருமதி சாந்தினி வாகீசன் பெற்றுக் கொண்டார். சிறப்பு பிரதிகளை யாழ்ப்பாணம் தேசிய கல்விய கல்லூரி விரிவுரையாளர் துரை. இளங்குமரன் கலாசாலையின் விரிவுரையாளர்களான பொ. சற்குணநாதன், த.தவசேகர், நிர்வாக உத்தியோகத்த திருமதி வதனி கேதாரநாதன் ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து கலாசாலையின் முன்னைநாள் அதிபர்கள் மற்றும் நீண்ட காலம் சேவை ஆற்றிய பெருந்தகைகளுக்கான கௌரவம் இடம்பெற்றது. ஒரு வருட காலத்திற்கு மேலாக கலாசாலையின் ஆலயத்தில் பூசகராக பணி ஆற்றிக் கொண்டிருப்பவரும் கற்பகப் பிள்ளையார் ஆலய பிரதம குருவுமாகிய சிவசிறி பா. செல்வசேன குருக்களுக்கான கௌரவம் முதலில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து முன்னாள் அதிபர்களான செவாலியர் திருமதி சிவலோக நாயகி இராமநாதன், செல்வி மலர் சின்னைய . கை.பேணாட், வே. கா. கணபதிப் பிள்ளை, வீ. கருணைலிங்கம் மற்றும் 40 வருடங்கள் சிற்றூழியராக கடமை புரிந்த ந. சுப்பிரமணியம் ஆகியோருக்கான கௌரவம் இடம்பெற்றது.

இந்நிகழ்வினை கலாசாலையின் மூத்த விரிவுரையாளர் திருமதி அன்பரசி கருணாகரன் நெறிப்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து கல்வி அமைச்சரின் செயலாளர் எம் என் ரணசிங்க உரையாற்றினார். அவரது உரையை அடுத்து கடல் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கல்வி அமைச்சர் டாக்டர் சுசில் பிரேமஜெயந்த உரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து கலாசாலைக்கான 25 ரூபா பெறுமதியான முத்திரை மற்றும் முதல் நாள் அஞ்சல் உறை என்பன வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதனை கலாசாலையின் 1998- 1999 ஆசிரிய மாணவர் அணியினர் இணைந்து வெளியிட்டு வைத்தனர். இதனை வெளியீடு செய்வதில் முன் நின்று உழைத்த விரிவுரையாளர் வே.சேந்தன் முத்திரை வெளியீட்டு நிகழ்வுகளை நெறிப்படுத்தினார்.



முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் ச.குணபாலன். ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயா அதிபர் சி நாகேந்திரராஜா ஆகியோர் முத்திரை வெளியீட்டில் பங்கு கொண்டனர். முத்திரை வெளியீட்டினை பிரதம அஞ்சல் மா அதிபர் வெளியிட்டு வைத்தார்.

அமைச்சர்கள் இருவரும் முதல் முத்திரையையும் அதற்கான அஞ்சல் உறையினையும் பெற்றுக் கொண்டனர்

அதனைத் தொடர்ந்து செல்வி ரஜிதா சின்னதுரை அவர்களின் நெறியாள்கையில் பல்கலாசார நடனம் இடம்பெற்றது. இது காண்போரைக் களிப்படைய வைத்த நிகழ்வாக அமைந்திருந்தது.

நிறைவாக பிரதி அதிபர் த கோபாலகிருஷ்ணன் நன்றி உரை ஆற்றினார் நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவுற்றன.

நிகழ்வில் கலாசாலையுடன் தொடர்புடைய முன்னாள் விரிவுரையாளர்கள் அலுவலர்கள் பழைய மாணவர்கள் தற்போதைய மாணவர்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் மண்டபம் நிறைந்த அளவில் கலந்து கொண்டனர். ●

# இலங்கையை ஆள்வதற்கு 225 பேர் தேவையில்லை!

## 25 பேரே போதும் என்கிறார் மிஹிந்தலை விகாராதிபதி

கொழும்பு, ஒக். 13



நாம் எதிர்பார்க்கும் புதிய ஆட்சியில் ஜே. ஆரின் அரசியலமைப்பு ஒழிக்கப்படவேண்டுமெனவும் இந்த நாட்டை ஆள்வதற்கு 225 பேர் தேவையில்லை 25 பேரே போதும் என மிஹிந்தலை ரஜமகா விகாராதிபதி வலஹங்குன வேவே தம்ம ரத்ன தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்தில் நாட்டை ஆளும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. நாட்டை அழிக்க முனையும் பயங்கரவாதிகளே உள்ளனர்.

அதேவேளை நாட்டு மக்களை நேசிக்கும் ஆட்சியாளர் யாரும் இல்லை. நல்லவராக இருந்தாலும் சரி, கெட்டவராக இருந்தாலும் சரி, தங்களை வளப்படுத்திக் கொள்வதே அவர்களின் ஒரே நோக்கம்.

தேசிய பாதுகாப்பு கூட கடுமையான அச்சுறுத்தலில் உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் விருப்பத்தின்படி, ஆயுதப்படைகளின் எண்ணிக்கை 100,000 ஆக குறைக்கப்படவுள்ளது.குறைந்த பட்சம் பொலிஸ்மா அதிபரை நியமிக்க முடியாத அரசாங்கமே உள்ளது.

இந்த நாட்டுக்கு கேடு விளைவிக்கும் கட்சிகளை இல்லாதொழிக்க முயற்சிக்கிறோம்.

நாம் எதிர்பார்க்கும் புதிய ஆட்சியில் ஜே.ஆரின் அரசியலமைப்பு ஒழிக்கப்பட வேண்டும். இந்த நாட்டை ஆள்வதற்கு 225 பேர் தேவையில்லை. 25 பேரே போதுமானது.ஆட்சியாளர்கள் நாட்டுக்கு என்ன செய்தார்கள்? நாட்டையே திவாலாக்கியுள்ளனர்.

எனவே, நாட்டை ஆட்சி செய்யும் துரோகம் குழுவுடன் தொடர்பில்லாத புதிய அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் என்ற பழைய சேற்றில் கிடக்கும் அனைத்து மக்களையும் அகற்றிவிட்டு புதிய தலைமைத்துவத்தின் கீழ் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எங்களின் ஒரே நம்பிக்கை-என்றார்

# கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவன் ரோகித் வெங்கலப் பதக்கம் வென்று சாதனை!

காரைதீவு, ஒக். 13

அகில இலங்கைரீதியில் கல்முனை கல்வி வலயத்திற்கு கராத்தேயில் கிடைத்த முதல் பதக்கம் கிடைத்துள்ளது.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவன் கேதீஸ்வரன் ரோஹித் இந்த பதக்கத்தை பெற்று சாதனை படைத்துள்ளார்.

காலியில் 2023.10.07 தொடக்கம் 2023.10.09 வரை நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய கராத்தே போட்டியில் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவன் கேதீஸ்வரன் ரோகித் 16 வயதுக்கு உட்பட்ட பிரிவினர்களுக்கிடையிலான கும்மித்தே போட்டியில் வெங்கல பதக்கம் வென்றுள்ளார்.

இம் மாணவன் 36 வீரர்களுடன் போட்டியிட்டு 3ஆம் இடத்தினை பெற்று சாதனை படைத்துள்ளார்.



# களுவாஞ்சிக்குடியில் சிறுவர்கள், முதியோர்களின் பாரம்பரிய விளையாட்டும், கலை நிகழ்வுகளும்!





மட்டக்களப்பு, ஒக். 13

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்துடன் களுவாஞ்சிக்குடி நந்தவனம் சமூக நலன்புரி அமைப்பு இணைந்து ஏற்பாடு செய்த சிறுவர், முதியோர் தின விழா நந்தவனம் சமூக நலன்புரி அமைப்பின் தலைவர் சா. கருணாகரன்பிள்ளை தலைமையில் நந்தவனம் முதியோர் இல்லத்தில் இடம்பெற்றது.

"ஆரோக்கியமிகு அகவையினை நோக்கி உலகளாவிய சிரேஷ்ட பிரஜைகளுக்கான மனித உரிமைகளை தலைமுறைகள் கடந்து நிறைவேற்றுதல்" எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில், களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இதன்போது முதியோர்களும் சிறுவர்களும் பல்வேறு பாரம்பரிய விளையாட்டு மற்றும் கலை நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன், முதியோர்களுக்கான அத்தியாவசிய பொருட்களும் உடைகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரன், பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர், பொது சுகாதார பரிசோதகர், கிராம உத்தியோகத்தர், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

